# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 8

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | சித்திரை–02 | 14–04–2004 | புதன்கிழமை | ஓசை –56







## மட்டக்களப்பில் துரோகி கருணா குழுவினால்

# பொதுமக்கள், போராளிகள் பலர் படுகொலை;

# பல சடலங்களும், புதைகுழிகளும் கண்டுபிடிப்பு!

## மக்கள் மீது கொடூரத் தாக்குதல்

**மட்டக்களப்பில் கருணா குழுவினரால் படுகொலை செய்யப்பட்ட போராளிகள் மற்றும் பொதுமக்களின் சடலங்களும், புதைகுழிகளும் கண்டுபிடிக்கப்பட்டுவருகின்றன. பரவலான முறையில் இப்படுகொலைகள் இடம் பெற்றுள்ளதையிட்டு மட்டு. வாழ் மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.**

நேற்று பல சடலங்கள் மீட்கப் பட்டன. களுவங்கேணியில் கடந்த 9ஆம் திகதி கருணா குழுவினரால் அழைத்துச் செல்லப்பெற்ற மாணிக்கவேல் சபாரட்ணம் நேற்று சடலமாக மீட்கப் பெற்றார். இவரது சடலத்துடன் மேலும் இரு சடலங்கள் காணப்பட்டன. இவை இனங்காணப்படவில்லை அழுகிய நிலையில் காணப்பட்ட இச் சடலங்கள் நேற்று புதைக்கப்பட்டன. சபாரட்ணத்தின் மனைவி இது பற்றி குறிப்பிடும் போது தனது கணவரை 9ம் திகதி 10 மணியளவில் விசாரணைக்குக் கூட்டிச் சென்றதாகவும், ஒரு மணி (8ஆம் பக்கம் பார்க்க)

## துரோகி கருணா புரிந்த அராஜகம்;
## லெப்.கேணல் நீலனும், ஐவரும் வீரச்சாவு

புலனாய்வுத்துறையின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பொறுப்பாளர் லெப். கேணல் நீலன் (சின்னத்தம்பி) வீரச்சாவடைந்தார். கடந்த திங்களன்று இவர் துரோகி கருணாவால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். மேலும் 4 போராளிகளும், ஆதரவாளர் ஒருவரும் கருணாகுழுவினரால்சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

01.03.2004 அன்றிலிருந்து கருணாவால் தடுத்துவைக்கப்பட்டிருந்த லெப்.கேணல் நீலன் அவர்கள் துரோகி கருணா தப்பி ஓடும்வேளை கருணாவின் மருதம் முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு வைத்துச் சுடப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வழமையான பணிகளில் ஈடுபட்டிருந்த புலனாய்வுத்துறைப் போராளிகள் பிரத்தியேகமான சந்திப்புக்கென 01.03.2004 அன்று மீனகம் முகாமிற்கு கருணாவிடம் அழைக்கப்பட்டிருந்தனர். மீனகம் முகாமில் கருணாவால் நேரடியாக விசாரிக்கப்பட்டிருந்ததுடன் நீலன் அவர்கள் 01.03.2004 அன்று தனிமைப்படுத்தப் (8ஆம் பக்கம் பார்க்க)

## ஏறாவூர்ப்பகுதிக் காட்டிற்குள் புதைக்கப்பட்டிருந்த சடலங்கள் மீட்பு

ஏறாவூர் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட களுவாங்கேணி வீதியில் காடுகளுக்குள் புதைக்கப்பட்டிருந்த 03 சடலங்களை பொலிசார் மீட்டுள்ளனர். இவை மூன்றும் ஆண்களின் சடலங்களென ஏறாவூர் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். இதேவேளை சடலங்களின் நெற்றியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டதுடன் கைகள் பின்புறமாக கட்டப்பட்டிருந்ததாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வாகனங்கள், ஆயுதங்கள் கருணா குழுவால் எரிப்பு

(மட்டக்களப்பு)

தப்பியோடும்போது கருணா குழுவினர் ஒருதொகுதி ஆயுதங்களையும், வாகனங்களையும் எரித்துவிட்டுச் சென்றுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.இவ் ஆயுதங்களையும், வாகனங்களையும் விடுதலைப்புலிகள் பயன்படுத்தக் கூடாது என்னும் நோக்கிலேயே தீயிடப்பட்டதாகத் தெரியவருகின்றது.

## தமிழ்க் கூட்டமைப்பு பா.உ.கள் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(வடமராட்சி)

பாராளுமன்றத்தின் கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களை சந்தித்துப் பேச்சுக்களை நடாத்தவுள்ளதாக கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பெரும்பாலும் அடுத்தவார முற்பகுதியில் (8ஆம் பக்கம் பார்க்க)

## தமிழரசுக் கட்சிப் பா.உ.கள் நாளை கூடவுள்ளனர்

### சபாநாயகர் தெரிவு பற்றியும் ஆராய்வர்

இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டம் நாளை கொழும்பில் நடைபெறவுள்ளது.

இத்தகவலை கட்சியின் பொதுச் செயலாளர் மாவைசேனாதிராசா தெரிவித்துள்ளார் இதற்கான அழைப்பு இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

எதிர்வரும் 22 ஆம் திகதி 13 வது பாராளுமன்றத்தின் முதல் அமர்வு தொடங்கவுள்ளது அன்றைய தினம் 13வது பாராளுமன்றத்திற்கான சபாநாயகர் தெரிவு செய்யப்படவுள்ளார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதனையடுத்து நாளை நடைபெறவுள்ள தமிழரசுக் கூட்டத்தில் இந்த விடயம் பற்றியும் கலந்தாலோசிக்கப்படவுள்ளது என்றும் மாவை சேனாதிராசா கூறியுள்ளார்.

### - மட்டு- அம்பாறைப் பிரதேசத்தில் -

## 18 அகவைக்குக் குறைந்த 168 போராளிகள் உட்பட
## 269 போராளிகள் புலிகளால் பெற்றோரிடம் ஒப்படைப்பு

மட்டு-அம்பாறைப் பிரதேசம் கருணாவின் பிடியிலிருந்து மீட்கப்பட்டதைத் தொடர்ந்து மீட்பு அணியுடன் இணைந்துகொண்ட பல போராளிகள் அவர்களது விருப்பின் பேரில் வீடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இதன் ஓரங்கமாக நேற்று வாகரைப் பிரதேசத்தில் மீட்பு அணியுடன் இணைந்துகொண்ட 18 அகவைக்கு மேற்பட்ட 33 பெண் போராளிகளும், 68 ஆண் போராளிகளுமாக 101 போராளிகள் கதிரவெளிப் பாடசாலையில் வைத்து காலை 7.00 மணி தொடக்கம் அவர்களது பெற்றோரிடம் நேரடியாக ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து காலை 10.00 மணியளவில் 18 அகவைக்கு உட்பட்ட 113 பெண்போராளிகளும் ,55 ஆண் போராளிகளும் மட்டு-அம்பாறை யூனிசெவ் பிரதிநிதியூடாக அவர்களது வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். 18 அகவைக்குக் குறைந்த 168 போராளிகளை அவர்களது பெற்றோர்கள் அழைத்துச

(8ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவினருடன் சிறப்புத் தளபதி ரமேஸ் சந்திப்பு

(மட்டக்களப்பு)

போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு கிளையினருடன் விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட சிறப்புத்தளபதி ரமேஸ் சந்தித்து கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார். மட்டக்களப்பு மாவட்ட கண்காணிப்புக் குழுவினருடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் இந்தச்சந்திப்பு இடம் பெற்றுள்ளது என கண்காணிப்புக்குழுவின் பிரதித்தலைவரான கக்ளப் கொக்லண்ட் கூறியுள்ளார்.

நோர்வேயின் அனுசரணையுடன் தமிழீழ விடுதலைப்புலிகளும் சிறிலங்கா அரசாங்கமுமே இந்தப் போர்நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன இதனடிப்படையில் சமாதானப் பேச்சுவார்த்தை விரைவில் ஆரம்பிக்கப்படவேண்டும். கருணாகுழு (8ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றோரினதும், பிள்ளைகளினதும் விருப்பிற்கிணங்கவே வீட்டிற்கு அனுப்புகிறோம்

### மட்டு–அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன்

பெற்றோர் தமது பிள்ளைகள் தங்களுடன் வருவது நல்லது என கருதியதற்கு அமையவும் அப்பிள்ளைகள் அதனை விரும்பியமைக்கு அமையவும் தேசியத் தலைவரின், பணிப்பிற்கிணங்க இப்போராளிகளை நாம் அவர்களது வீட்டிற்கு அனுப்பி வைத்துள்ளோம் என மட்டு- அம்பாறை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவித்தார். போராளிகளைக் கையளித்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார் அங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்; இவர்களை நாம் அனுப்பிய போது எவ்வித நிபந்தனைகளோ கட்டுப்பாடுகளோ விதிக்கவில்லை அவர்கள் தமது இயல்பு வாழ்கையினை தொடரலாம் அத்துடன் அவர்களை மீண்டும் எமது (8ஆம் பக்கம் பார்க்க)

### மட்டு. மாவட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்ட

## வடபகுதி மக்கள் மீண்டும் தமது பணிகளைத் தொடரக் கோரிக்கை

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து துரதிஷ்டவசமாக வெளியேற்றப்பட்ட வடபகுதி மக்களுக்கு நாங்கள் மிகவும் மனப்பூர்வமான அனுதாபத்தினை எமது தலைமையின் சார்பாகவும்,மட்டு-அம்பாறை மாவட்ட தளபதிகளின் சார்பாகவும் தெரிவிக்கின்றோம். அத்துடன் வெளியேற்றப்பட்ட மக்கள் அனைவரும் மீண்டும் வந்து அவர்களுடைய பணியினை மேற்கொள்ளலாம் என மட்டு-அம்பாறை அரசியல் துறைப்பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவித்துள்ளார். அவர்களுக்கு ஏதாவது துன்பகரமான சம்பவங்கள் நிகழ்ந்தால் எமது அரசியல் பணியினை மேற்கொள்கின்ற போராளிகளுடனும் ஏனைய போராளிகளுடனும் கேட்டறிந்து அவர்களுடைய பணியினை எவ்வித தடையும் இன்றி மேற்கொள்ளலாமென அவர்களை அன்புடன்

(8ஆம் பக்கம் பார்க்க)

**வரிவிளம்பரம்**

**இடமாற்றம்**

கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் இயங்கி வந்த வெண்ணிலா திரையரங்கம் 12/04/2004 திங்கள் முதல் கரடிப்போக்கு கிளிநொச்சியில் இயங்க ஆரம்பித்துள்ளது என்பதை திரைப்படரசிகர்களுக்கு அறியத்தருகின்றோம். நேசன் உரிமையாளர். (9372)


## தாமதமாக இலவச சீருடை

(மன்னார்)

பாடசாலை மாணவர்களுக்குரிய இவ்வாண்டுக்கான இலவச சீருடைகள் மன்னார் நகர்ப் பகுதியில் விநியோகிக்கப்பட்டு வருகிறது. கடந்த சனவரி மாதம் வழங்க வேண்டிய இந்த சீருடைகள் தற்பொழுதே விநியோகிக்கப்படுகிறது. கடந்த காலங்களில் பாடசாலை அதிபர்களூடாக விநியோகிக்கப்பட்டு வந்த இச்சீருடை இம் முறையிலிருந்து கிராம சேவகர்கள் ஊடாக விநியோகிக்கப்பட்டு வருகிறது. இதேவேளை இவ்வாண்டுக்கான இலவசப் பாடப் புத்தகங்கள் இதுவரை விநியோகிக்கப்படாதுள்ளது குறித்து பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர். (மி)

# பல தளபதிகள் கருணாவிடமிருந்து தப்புவது எப்படி எனத் தெரியாது தவித்தனர்

## மட்டக்களப்பிலிருந்த நிலை குறித்து பெண் போராளி அரசி

நான்பார்த்த அளவில் பலதளபதிகள் கருணாவிடமிருந்து எப்படித் தப்பிக் கொள்வது என்று தெரியாது தவித்தார்கள். ஒவ்வொரு போராளியும் ஒருவரிடம் ஒருவர் நம்பிக்கையில்லாததொருநிலை இருந்ததால் கதைக்கவே பயந்த நிலையில் இருந்தனர். இவ்வாறு மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட மகளிர் நிர்வாகப் பொறுப்பாளராக இருந்த பெண் போராளி அரசி என்பவர் மட்டக்களப்பில் இருந்தநிலை குறித்து தெரிவித்தார்.

தலைவரின் கட்டளைகளை மீறிகருணா திட்டமிட்ட சதிகளைச் செய்து கொண்டிருந்த வேளை மனம் உடைந்த நிலையில் இருந்தேன்.

இதன் காரணமாக நான் எனது வேலைகளை செய்ய முடியாமலும் ஆனால் அதைக்காட்டிக் கொடுக்காமலும் இருந்தேன்.

அவர்களுக்கு என் மீதுசந்தேகம் இருந்தலினால் என்னைக் கூப்பிட்டு வீட்டிற்குச் செல்லப்போகிறீர்களா அல்லது தங்களுடன் நிற்கப்போகிறீர்களா எனக் கேட்டார்கள்.

எனக்குஅவர்களுடைய விடயங்கள் சில தெரியும் என்பதால் என்னை அவர்கள் சுடலாம் என்ற சந்தேகத்தை மனதில் வைத்து நான் போகவில்லை நிற்கப்போகிறேன் என்றொரு தகவலை அவர்களுக்கு சொல்லிவிட்டேன்.

எமது தேசியத் தலைவரைப்பற்றி தேவையற்ற கதைகளையும் எங்களுடைய தமிழீழ மக்களைப் பற்றி கேவலமாகக் கதைத்துக் கொண்டும் இருநதார்கள். என்னுடைய மனம் உடைந்தநிலையில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர் நான் என்ற உறுதியோடுதான் அங்கிருந்தேன்.

இருந்தும் கூட எனது மனதை நாளாந்தம் உடைந்தும் உடையாதது போல பாவனையில் கண்ணீரோடு தான் இருந்தேன்.

என்னைப் பொறுத்தவரை நான் எமது தேசியத் தலைவரையும், மக்களையும் மறக்கவில்லை மாவீரர்களையும் மறக்கவில்லை. நாங்கள் பட்ட கஷ்ரதுன்பங்களை எல்லாம் இந்தச் சமாதான காலத்தில் தீர்ந்து நாம் நிம்மதியாக இருக்க வேண்டும் என்றிருந்த இந்த வேளை கருணா இப்படி ஒரு முடிவை எடுத்திருக்கிறாரே. நான் தலைவருக்கு சில செய்திகளை தெரியப்படுத்த வேண்டும். எவ்வாறு தெரியப்படுத்துவது என்று தெரியாமல் வேதனையுடன் மீனக முகாமில் இருந்தேன்.

தளபதிகள் கூட மனம் நொந்து ஒன்றும் புரியாத நிலையில் இருந்தார்கள். தொடர்பு இருந்தால் கடிதங்கள் எழுதி அனுப்புங்கள் நாங்கள் வரப்போகின்றோம் எப்படி வருவது என்று தெரியாத நிலையில் உள்ளோம் என்பதை தலைவருக்குத் தெரியப்படுத்துங்கள் என்றும் கூறியிருந்தார்கள்.

ஆனால் நான் எத்தனையோ கடிதங்கள் எழுதிவைத்திருந்தும் அது அனுப்பமுடியாத நிலையில் பின்னர் கிழித்தெறிந்து விட்டேன்.

தலைவரின் படத்தை கருணாகுழு கிழித் தெறிந்தவேளை தலைவரின் படத்தை தருமாறுகேட்டார்கள். அவ்வேளை மயூரி என்றபோராளி " என்னை பெற்று வளர்த்த தாய், தந்தையர்கள் என்னை வளர்த்தது. குறைவாக இருக்கலாம்நான் தேசியத் தலைவர் அவர்களின் மடியில் இருந்து வளர்ந்தேன். நான் ஒரு போதும் எங்கள் தலைவரின் படத்தைக் கிளித்தெறிய மாட்டேன். என்னை வெறுத்தாலும் சுட்டாலும் நான் கிழித்தெறிய மாட்டேன் எனக் கூறினார்.

நிலாவினியையும், தீந்தமிழையும் தவிர உண்மையிலேயே நான் பார்த்தளவில் ஏனைய தளபதிகள் கருணாவிடம் இருந்து எப்படித் தப்பிக் கொள்வது என்று தெரியாது தவித்திருந்தனர். ஒவ்வொரு போராளிக்கும் மற்றயவர்களுடன் கதைப்பதற்குப் பயம். ஒருவரிடமும் நம்பிக்கை இல்லாததொரு நிலை ஏற்பட்டிருந்தது. நான் கூட யாரிடம் எப்படி கதைப்பதென்பது புரியாத நிலையில்தான் இருந்தேன்.

இதேவேளை நான் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்பதால் போராளிகள் என்னிடம் கதைப்பார்கள். ஆனால் மற்றவர்களிடம் கதைப்பதில்லை.

ஆனால் அவர்கள் நாங்கள் ஓடப்போகிறோம். ஆனால் ஓடி எங்கு போவது. வாகன ஒழுங்கு செய்யுங்கள் என்று மறைமுகமாகக் கேட்டார்கள்.

வெளியில் போனால் வாகன ஒழுங்குபடுத்தி உங்களை நகரத்திற்கு கொண்டு சென்று அங்கிருந்து அனுப்பலாம் என்று நான் கூறினேன். இதேவேளை அண்மைக்காலத்தில் பொறுப்பாளர்கள், போராளிகள் அங்கிருந்து ஓடிவிட்டார்கள்.

நான் இரகசியமான முறையில் மக்களிடம் சென்று கருணாவின் பிரச்சினை இதுதான் இதற்காகத்தான் இப்படி ஒரு முடிவை எடுத்திருக்கிறாரே தவிர தலைமைத்துவத்தில் ஒருபிழையும் இல்லை என்று சொன்னேன். நான் இப்படிக் கதைத்ததென்று கூறவேண்டாம். எனக்கு ஆபத்துவரும் என்று அவர்களிடம் கூறினேன். கதைத்தால் நாங்களும் இப்போது கம்பிக் கூட்டில் இருக்கவேண்டும் நாங்கள் கதைக்க மாட்டோம் என்று ஆதரவுடன் எனக்கு அவர்கள் கூறினார்கள்.

அப்படி வீட்டிற்கு எல்லோரும் போவதென்றால் இங்கு என்ன செய்யப்போகிறீர்கள் என மக்கள் கேட்டார்கள்.

நான் என்றும் தமிழீழ விடுதலைப் புலிதான் என்று கூறினேன்.

அதேவேளை வன்னி மாவட்டத்தில் இருந்து தலைவர் அனுப்பிய போராளிகள்தொடர்பு கொண்ட போதும் கதைக்க முடியாத நிலை இருந்தது. அவர்கள் கருணாவின் பக்கம்தான் நிற்கின்றீர்கள். கருணாவின் சொல்லைக் கேட்டு ஏன் நிற்கின்றீர்கள் என்று கேட்டார்கள். தொடர்பெடுத்தவரிடம் நான் மனப்பூர்வமாகச் சொன்னேன். நான் ஒரு போதும் யாருடைய கதையையும் நம்பவில்லை. யாரையும் கேட்டு நான் நிற்கவில்லை. நான் இன்னும் தமிழீழ விடுதலைப்புலி களாகத் தான் நிற்கின்றேன் என்று,

அவர்கள் அந்த நேரத்தில் என்னை நன்றாகப் புரிந்து கொண்டார்கள். அதனால், அவர்கள் நான் நின்ற இடத்தைத் தேடிவந்தார்கள். முகாமில் வந்துகதைத்தார்கள். நான அவர்களிடம் கதைத்தபோது இனி எனது உயிருக்கு ஆபத் தில்லை என்பதை தெளிவாக நினைத்தேன்.

ஆனால், ஒரு கட்டத்தில் நான் நினைத்தேன். கருணாவிடம் இருந்தும் போராளிகள் அழிவார்கள். அங்கிருந்தும் தமிழீழ விடுதலைப் புலிகள் அழிவார்களாக இருந்தால் நான் மீண்டும் மீனக முகாமிற்கு போவதற்கு முயற்சி செய்து அங்கு போய் கருணாவையும் சுட்டு, நானும் தற்கொலை செய்வது என்று ஒரு முடிவை எடுத்து வைத்திருந்த வேளையில் இப்படிஒரு முடிவு கிடைதது. எனக்கு பெரும் சந்தோஷமாக இருக்கிறது.

இதேவேளை, இங்கு சிறு வயதினரும் போராளிகளாக இருந்தார்கள். ஆனால், இவர்களின் பெயர்கள் எமது தலைமைச் செயலகத்தின் பட்டியலில் சேர்க்கப்படவில்லை. நிதி மோசடி மற்றும் அவரது நடத்தைப் பிரச்சினையாலுமே கருணா இந்த நிலைக்கு மாறினார். இப்படி எல்லாப் பிரச்சினையையும் வைத்துக் கொண்டு தான் அங்கு போனால் தனக்கு ஆபத்து வரலாம். தன்னுடைய சுதந்திரம் இனி மட்டக்களப்பில் இருக்காது என்பதை நினைத்து தமிழீழப் பொறுப்புக்களை தேசியத் தலைவரிடம் தான் கேட்டதாகவும் கூறி மக்கள் மத்தியில் ஒரு பிரச்சினையை ஏற்படுத்த வேண்டும். அதனால் மக்கள் தனது பக்கம் விருப்புடன் இருப்பார்கள் என்றுதான் அவர் நினைத்தார் என போராளி அரசி தெரிவித்தார்.

-மன்னார்-பள்ளிமுனையில்-

## ஓட்டைப் பிரித்து இறங்கிய கள்வனை வலை மூலம் பிடித்த பெண்

(மன்னார்)

மன்னார்-பள்ளிமுனையில் ஓட்டைப் பிரித்து வீட்டிற்குள் இறங்கிய கள்வனை வீட்டில் தனியாக இருந்த பெண் வலையைப் போட்டு பிடித்த சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது. நேற்று முன்தினம், இரவு வீட்டின் ஓட்டைப் பிரித்து கள்வன் வீட்டிற்குள் இறங்குவதைக் கண்ட குறிப்பிட்ட பெண் கள்வனுக்குத் தெரியாமல் வெளியே சென்று வலையை எடுத்து கள்வன் சென்ற பாதையில் போட்டு அயலவர்களை அழைத்த போது கள்வன் திரும்பிச் சென்ற வேளை வலையில் சிக்கிக் கொண்டான் இவ்வேளை ஸ்தலத்திற்கு ஓடி வந்த அயலவர்கள் கள்வனைப் பிடித்து விடுதலைப் புலிகளிடம ஒப்படைத்துள்ளனர். (மி)

## கட்டாக்காலி நாய்கள் ஒழிப்பு குறித்த கலந்துரையாடல்

வன்னியில் கட்டாக்காலி நாயழிப்புத் தொடர்பாக கடந்த 23ம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடாந்து, மேலும் கலந்துரையாடலொன்று நாளை வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு தமிழீழ சுகாதார சேவைகள் நடுவப்பணியகத்தில் நடைபெறும். இதனுடன் தொடர்புபட்ட அனைவரையும் வருகைதருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.


## சாவு அறிவித்தல்

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம.

**கலைஞர் திலகம்**
**ஸ்தபதி. சின்னத்துரை நவரத்தினம்**
**(ஆச்சாரியார்)**

யாழ்/காங்கேசன்துறை, மயிலிட்டியைப்பிறப்பிடமாகவும்,வன்னிமாவட்டம் மல்லாவியை தற்காலிக வதிவிடமாகவும்கொண்ட ஸ்ரீமுருகன் கனகசிற்பாலய ஸ்தாபகர் கலைஞர்திலகம் சின்னத்துரை நவரத்தினம் அவர்கள் 12.04.2004 திங்கட்கிழமை யாழ்.இருபாலையில் விஸ்வபதம் அடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை(ஆசிரியர்), அன்னப்பிள்ளை தம்பதிகளின் ஏக புத்திரனும், தவமணி தேவியின் அன்புக்கணவரும், செல்வாம்பிகை, செல்வேந்திரன்(டோகா),செல்வஸ்ரீ, செல்வமனோகரி, செல்வசுதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோகேஸ்வரி, சரோஜினி தேவி, இராசலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், சிவரத்தினசிங்கம் (டோகா) அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரது இறுதிக்கிரியைகள் 14.04.2004 இன்று 2.00 மணிக்கு இருபாலையில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

த.மு.
வீரபத்திரர் கோயிலடி,
இருபாலை (4122)

தகவல்:-
குடும்பத்தினர்.



## சாவு அறிவித்தல்



**திருமதி பகிரதி**

உடையார்கட்டுதெற்கு குரவிலை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி பகிரதி அவர்கள் 12.04.2004 நேற்றுக் காலமானார். அன்னார் வரதராஜாவின் அன்பு மனைவியும், லட்சுமணன் (சாத்திரியார்) வீரம்மாள் ஆகியோரின் மருமகளும், ராஜலச்சுமி, விஜயகுமாரி அன்னலட்சுமி, மஞ்சுளா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று இன்று 14-04-2004 பி.ப.2.30 மணியளவில் உடையார்கட்டு தெற்கு இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக பூதவுடல் எருத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
(மாமா) லட்சுமணன் சாத்திரியார்,
உடையார்கட்டு தெற்கு,
குரவில், உடையார்கட்டு.

(4436)



அமெரிக்க கடற்படையின் 1வது பிரிவின் வீரர்கள் பலூஜாவின் தென்பகுதியில் எதிர்நிலைகளை அவதானிப்பதையும், மற்றொரு வீரர் தேடுதலின்போது வீடொன்றின் கதவை காலால் உதைந்து திறப்பதையும் படங்களில் காண்க.

# பயங்கரவாதத்தை ஒழிக்க இணைந்து பணியாற்ற முடிவு

மலேசியாவும்- தாய்லாந்தும் தமது எல்லைப்புறத்தில் பயங்கரவாதத்தை ஒழிப்பது என்று இணைந்து முடிவு செய்துள்ளன.தாய்லாந்தின் தென்பகுதியில் முஸ்லிம்களின் கிளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்கும் இந்த நடவடிக்கை உதவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென் தாய்லாந்தில் தீவிரவாதிகள் மலேசியாவின் எல்லையில் தஞ்சம் அடைந்துள்ளனர் எனும் குற்றச்சாட்டு எழுந்திருந்தது.இதனையடுத்து மலேசியாவுக்கும் தாய்லாந்துக்குமிடையிலான உறவுகள் விரிசல் ஏற்பட்டிருந்தது. இதனையடுத்துமலேசியப் பிரதமர் அகமட் பதானியும், தாய்லாந்து பிரதமர் தட்சினும் நடத்திய பேச்சுவார்த்தைகளையடுத்து, இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளனர்.

# தென்னாபிரிக்க தொலைக்காட்சியில் தமிழ் நிகழ்ச்சிகள் ஒளிபரப்ப ஏற்பாடு

தென்னாபிரிக்கத் தொலைக் காட்சியில் தமிழ் நிகழ்ச்சிகளை ஒளி பரப்ப நடவடிக்கை எடுத்துள்ளதாக தென்னாபிரிக்க சனாதிபதி தெரிவித் துள்ளார்.

தென்னாபிரிக்காவில் இன்று புதன் கிழமை தேர்தல் நடை பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தேர்தலில் தமிழர்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் வகையிலேயே இந்த அறிவிப்பை சனாதிபதி விடுத்துள்ளார்.

# சைப்பிரஸை இணைக்கும் ஐ.நா.திட்டத்தை இரண்டு பிரிவினரும் ஏற்கவேண்டும்

## அமெரிக்க அரசு வற்புறுத்து!

**சைபிரஸை மீண்டும் ஒற்றுமைப்படுத்துவதற்கான ஐ.நா.சபையின் திட்டத்தை இரு பிளவுபட்ட சைபிரஸும் ஏற்றுக் கொள்ள வேண்டும் இவ்வாறு அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது**

ஐ.நா.சபைச் செயலர் கொபி அனான் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒன்றுபட்ட சைபிரஸ் திட்டத்தை பிளவுபட்ட இரண்டு சைபிரஸும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதேநேரம் ஐ.நா.சபையின் திட்டத்திற்கு மாற்று வழி எதுவுமே கிடையாது என்றும் அமெரிக்கா கூறியுள்ளது.

கிரேக்க சைபிரஸ்துருக்கி சைபிரஸும் இந்த திட்டத்தை ஏற்காது நிராகரிப் பார்களென்றால், புதிய உடன்படிக் கைகள் எதுவும் ஏற்படுத்தப்படமாட் டாது என்றும் அமெரிக்கா வலியு றுத்தியுள்ளது

சைபிரஸிலுள்ள கிரேக்கம் துருக்கி சைபிரஸ் நாடுகளுடனும், கிரேக்க சைபிரஸ்சமூகத்துடனும் பேச்சுவார்த் தைகள் நடத்தப்பட்டே இந்தத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

சைபிரஸ் 1974 ஆம் ஆண்டிலிருந்து இனரீதியாகப் பிரிக்கப்பட்டது இரண்டு பெரியசுயாட்சி மாநிலங்களைக் கொண்ட சமஸ்டி அமைப்பின் கீழ் சைபிரசை மீண்டும் ஐக்கியப்படுத் துவதற்கு ஐ.நா.சபை சமாதானத் திட்டத்தை முன்னெடுத்துள்ளது

இதே வேளை இந்த சமாதா னத்திடம் எதிர்வரும் 24அம் திகதி மக்கள் அபிப்பிராய வாக்கெடுப் பிற்கும் விடப்படவுள்ளது.




இந்தோனேசிய தலைநகரிலுள்ள ஐ.நா.அலுவலகம் முன் ஈராக்கிய அகதிகள் சிலர் அமெரிக்க இஸ்ரேல் தேசியக் கொடிகளை எரித்து ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்.

# பலூஜாவில் போர் நிறுத்தம் நீடிப்பு இணக்கத்தை உருவாக்க தீவிர முயற்சி

## வெளிநாட்டவர் பலர் மாயம்

அமெரிக்க கூட்டணி படையி னருக்கும் ஈராக் பலூஜா நகர் சன்னி முஸ்லிம்தீவிரவாதிகளுக்குமிடையில் கடந்த சில தினங்களாக மேற் கொள்ளப்பட்ட போர்நிறுத்தம் தொடர்ந்தும் அமுலில் இருக்கின்றது. இதேவேளை இருபகுதியினருக்கும் இடையிலான வன்முறைகளைத் தவிர்ப்பதற்கான மேலதிக பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வரு கின்றன. இது இவ்வாறிருக்க இரண்டு இராணுவ வீரர்கள் அடங்கலாக ஒன்பது அமெரிக்கர்களைக் காண வில்லையென அதிகாரிகள் தெரி வித்துள்ளனர்.இவர்கள் தவிர செக் நாட்டைச்சேர்ந்த மூன்று செய்தியா ளர்களும் ஈராக்கில்காணாமல் போயுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ஈராக்கில் கடத்தப்பட்ட சீன பிரஜைகள் ஏழு பேர் விடுதலை செய்யப்பட்டு இரகசிய இடமொன்றிற்குள் கொண்டு செல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள் ளது. இந்த ஏழு சீன நாட்டவரும் ஆன்மீகத் தலைவர் ஒருவரிடம் ஒப்ப டைக்கப்படும் காட்சி ,ஒரு தொலைக் காட்சியில் ஒளிபரப் பப்பட்டது.




ஜப்பான் தலைநகரில் யுத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டத்திலீடுபடும் ஜப்பானியர்கள். ஜப்பானியர் மூவர் ஈராக்கில் தீவிரவாதிகளால் பயணக்கைதி களாக வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சவூதி தலைநகரில் திடீர் மோதல் பொலிசார் உட்பட இருவர் பலி!

(றியாத்)

சவூதி அரேபியாவின் தலைநகரில் நேற்று முன்தினம்இடம்பெற்ற திடீர் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உட்பட இரண்டு பேர் கொல் லப்பட்டுள்ளனர்.

காரில் வந்த இருவரை சந்தேகத் தின்பெயரில் கடமையில் இருந்த பொலிசார் மறித்த போதே இந்த மோதல் இடம்பெற்றது. இதன் போது பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் கிளர்ச்சியாளர்கள் ஒருவருமே கொல் லப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு சவுதியில் பல தற்கொலைத் தாக்குதல்கள் நடைபெற்றன.

அல்-ஹைதா அமைப்பினரால் நடாத்தப்பட்டதாகக்கூறப்படும் இந் தத் தாக்குதல்களின் போது ஐம்பதிற்கும் மேற்பட் டோா கொல்லப்பட்டனர். இதனைய டுத்து கிளர்ச்சியாளர்களை ஒடுக்குவதற் காக தீவிர நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன.

# கெயிட்டியில் வறுமையை அகற்ற உதவிவழங்கும் நாடுகள் கூடி ஆராயும்

கெயிட்டி நாட்டுக்கு உதவுவது பற்றி உதவி வழங்கும் நாடுகள் இம் மாதம் இறுதியில் கூடி ஆராய வுள்ளது. கலவரத்துக்குள்ளான கெயிட்டியில் வறுமை ஏற்பட்டுள் ளது. இதனால் இந்த வறுமையை போக்குவதற்கு அமெரிக்காவும், ஏனைய சர்வதேச நாடுகளும் இம்மாத இறுதியில் கூடி கலந்தாலோசிக்கவும் பேச்சுவார்த்தை நடத்தவும் உள்ளன. உலக வங்கி யின் தலைமையில் கெயிட்டியில் இந்த மாநாடு நடத்தப்பட்டுள்ளது.

அதேநேரம் கிளர்ச்சிக்குக் காரண மாக அரிஸ்டை பதவி விலக்கப்பட்ட பின்னர், முதன் முதலாக கிடைக்க வுள்ள நிதியுதவிகளை கெயிட்டி அரசும் உள்ளூர் அமைப்புக்களும் எவ்வாறு கையாள வேண்டும் என்பது குறித்தும் இந்த மாநாட்டில் ஆராயப் பட்டுள்ளது.

# -குஜராத் மாநிலத்தில்- 14 பேர் எரித்துக்கொலை; மறுவிசாரணைக்கு உத்தரவு

(புதுடில்லி)

குஜராத் மாநிலத்தில் 14 பேர் உயி ருடன் எரித்துக்கொல்லப்பட்ட சம்ப வம்தொடர்பான வழக்கின் மறுவிசார ணையைமீண்டும் நடத்த வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

கடந்த 2002 ஆம் ஆண்டு நடந்த கோத்ரா ரயில் எரிப்பு சம்வத்தைத் தொடர்ந்து குஜராத்மாநிலத்தில் கலவரம்வெடித்தமையினால் பரோ தர நகரில் 14 பேர் உயிருடன் எரிக் கப்பட்டனர். இந்த வழக்கில் குற்ற வாளிகள் என இனங்காணப்பட்ட 21 பேரையும் குஜராத் உயர் நீதிமன்றம் கடந்த மாதம்விடுதலை செய்திருந் தது. இதனையடுத்து குஜராத்மாநிலம் முழுவதும் பதற்றமும், சர்ச்சையும் ஏற்படுத்தியிருந்தது. இதனையடுத்து எரித்துக்கொல்லப்பட்டவர்களின் உறவினர்களும், குஜராத் அரசும், உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளனர்.

இந்த மனுவை விசாரணை செய்த நீதிபதிகள் மீண்டும் எரித் துக்கொல்லப்பட்டவர்களின் வழக்கு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளனர். அதே நேரம் இந்த வழக்கை மகாராஸ் டிராவுக்கு மாற்றவும் உத்தரவிடப்பட் டுள்ளது.

# தாய்நாட்டின் பெருமையை எதிரணி களங்கப்படுத்துகிறது

## -பிரதமர் வாஜ்பாய் கூறுகிறார்.

சில எதிர்க்கட்சித்தலைவர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நாட்டின் பெயரை களங்கப்படுத்தி வருகின்றார்கள்

இவ்வாறு இந்தியப்பிரதமர் வாஜ்பாய் டல்பாவில் நேற்றுமுன தினம் பொதுக் கூட்டத்திலேயே குற்றம் சாட்டியுள்ளார்.

ஜார்க்கண்ட் மாநில மக்களை காங் கிரஸ் கட்சி அவமதித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். ஜார்க்கண்ட்மா நிலத்தில் நக்ஸலைட்டுக்களின் தொல்லைகளை சமாளிக்க மத்தியரசு முழு ஆதரவையும் வழங்கும் அதேவேளை, நக்ஸ லைட்டுக்களுட னான மோதலில் உயிரிழக்கும் பாதுகாப்புப் படையினரின் குடும்பங் களுக்கு உதவியளிக்கும் சட்ட மொன்றைமத்தியரசுவிரைவில் கொண்டு வரும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# பெருவில் கனத்த மழை உல்லாசப் பயணத்துறைப் பாதிப்பு

பெருவில் அண்மையில் பெய்துவரும் மழையினாலும் மண்சரிவினாலும் ஆறுபேர் உயிரிழந்துள்ளனர்.இதேவேளை பெருநாட்டிற்கு பயணம்மேற்கொண்டுள்ள ஆயிரத்து ஐந்நூறு உல்லாசப்பயணிகள் அங்கு பெய்துவரும் கடும் மழையினால் பெருமளவு அவலங்களை எதிர்நோக்கிவருகிறார்கள் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.



மசிடோனியன், சனாதிபதி தேர்தலில் போட்டியிடும் சாஸ்கோ கெடேவ் என்பவர் தனது ஆதரவாளர்களுடன்.

# கடந்த வாரத்தில்...

05.04.2004-11.04.2004

5

⇨ ஜெனிவாவில் நடைபெற்ற பொங்குதமிழ் நிகழ்வையொட்டி நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் மட்டு-அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் , மூத்த உறுப்பினர் கரிகாலன், ஆலோசகர் ருந்திரகுமாரன், யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் சிதம்பரநாதன், சுவிஸ் வாழ் தமிழ் அமைப்பின் செயலர் அன்ரன் பொன்ராஜ் பங்குபற்றினர்.



செய்தியாளர் மாநாட்டில்...

⇨ தமிழ் மக்களின் நிலைப்பாட்டை வலியுறுத்தி ஜெனிவாவில் ஐநா சபையை நோக்கி பல்லாயிரம் தமிழர்கள் கலந்துகொண்ட பொங்குதமிழ் எழுச்சிப் பேரணி.



மக்கள் எழுச்சிப் பேரணி...

⇨ இந்தோனேசிய பொதுத் தேர்தலில் 15 கோடி மக்கள் வாக்களிப்பு.

⇨ வன்னி மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற தமிழ் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐந்து பேரும் ஈச்சங்குளத்தில் உள்ள மாவீரர் துயிலும் இல்லத்தில் அஞ்சலி செலுத்தினர்.



துயிலுமில்லத்தில்...

⇨ தமிழரசுக்கட்சி சின்னத்தில் போட்டியிட்ட தமிழ் கூட்டமைப்பைச் சேர்ந்த 20 பாராளுமன்ற உறுப்பினர்களில் பாராளுமன்றக் குழுத் தலைவராக இரா. சம்பந்தனும் உபதலைவராக மாவை சேனாதிராசாவும், பிரதம கொரடாவாக செல்வம் அடைக்கலநாதனும் தெரிவு செய்யப்பட்டதுடன், தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தி தமது அரசியல் நடவடிக்கைகளை அமைத்துக் கொள்வது என தீர்மானமும் எடுத்தனர்.

⇨ சனாதிபதி மாளிகையில் நடைபெற்ற வைபவத்தில் சிறிலங்காவின் 13வது பாராளுமன்றத்தின் 18 வது பிரதமராக மகிந்தராஜபக்ஷ சனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்தார்.



பதவிப்பிரமாணம்...

⇨ மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ. சந்திரசேகரன், மேல்மாகாண மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன் ஆகியோர் அரசியல்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்து புதிய அரசாங்கம் அமைக்கப்படும் நிலையில் கட்சியின் நிலைப்பாடு, கொழும்பில் உள்ள அரசியல் சூழ்நிலைகள் தொடர்பாக கலந்துரையாடினர்.



சந்திரசேகரனுடன்...



மனோகணேசனுடன்...

⇨ தென் ஈராக்கில் நஸ்ரியா பகுதியில் ஷியா முஸ்லிம் போராளிகளுக்கும், இத்தாலியப் படையினருக்கும்ஏற்பட்ட மோதலில் 2 பொது மக்கள் பலி. 4 கவச வாகனங்கள் அழிப்பு.

⇨ பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்த இந்திய உயர்ஸ்தானிகர் நிருபன் சென் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே உள்ள இராஜதந்திர உறவுகள், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்போகும் நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடினா

7

⇨ பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மல்வத்தை பீட மகாநாயக்கர் ரம்புக்வெல சிறிவிபசி தேரரைச் சந்தித்து ஆசீர் வாதம் பெற்றார்.



ஆசிபெறும் பிரதமர்...

⇨ ஈராக்கில் பலூஜா நகரில் மசூதி இருக்கும் வளாகம் ஒன்றின் மீது அமெரிக்கப் படையினர் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் 40 பேர் பலி.

⇨ சனாதிபதியின் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமரை இந்திய உயர் ஸ்தானிகர் நிருபன் சென் சந்தித்து சமாதான முன்னெடுப்புக்கள் பற்றி கலந்துரையாடினர்.

⇨ சிறிலங்கா பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை அமெரிக்க தூதுவர் சந்தித்து இலங்கை மற்றும் பிராந்திய அரசியல் காரணிகள் குறித்து ஆராய்ந்தனர்.

⇨ இந்தியாவின் ஜார்க்கண்ட் மாநிலத்தி நக்ஸலைட்டுக்கள் நடத்திய நிலக்கண்ணி வெடித் தாக்குதலில் 26 பொலிசார் கொல்லப்பட்டனர், 8 பொலிசார் காயமடைந்தனர்.

⇨ ஜம்மு காஷ்மீரில் தேர்தல் பேரணியில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 15 பேர் பலி, 60 பேர் காயம்.

⇨ அமெரிக்கப் படையினரின் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் கண்ணிவெடி அகற்றும் பொறியியலாளர் பிரிவுக்கு வழங்கப்பட்ட பயிற்சி நிறைவு நிகழ்வு எம்பிலிப்பிட்டியாவில் உள்ள இராணுவப் பொறியியல் கல்லூரியில் நடைபெற்றது.

9

⇨ மட்டு-அம்பாறை மக்களையும், போராளிகளையும் கருணாவின் பிடியிலிருந்து மீட்டெடுப்பதற்கான நடவடிக்கையினை விடுதலைப் புலிகள் ஆரம்பித்தனர்.

⇨ சனாதிபதியின் பணிப்பின் பேரில் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்ல, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்தகிரி, விமானப்படைத்தளபதி டொனால்ட் பெரேரா ஆகியோர் மட்டக்களப்பில் உள்ள 233வது பிரிகேட் தலைமையகத்தின் பிரதேச படைமுகாம்களின் பொறுப்பதிகாரிகளைச் சந்தித்து கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு நிலை குறித்து ஆலோசனை நடத்தினர்.

10.

⇨ ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் 31 அமைச்சர்களும், 31 பிரதி அமைச்சர்களும் சனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்தனர்.



அமைச்சரவை பதவியேற்பு...

11.

⇨ அனலைதீவில் நிலைகொண்டுள்ள ஈபி.டி.பி தேசவிரோத கும்பலின் முகாம் அப்பகுதி மக்களால் தீயிட்டு எரிக்கப்பட்டது.

⇨ பாக்தாத்தின் மேற்குப் பகுதியில் அமெரிக்காவின் அப்பாச்சி உலங்குவானூர்தி சுட்டுவீழ்த்தப்பட்டது. இரு அமெரிக்கர் பலி.



அப்பாச்சி உலங்குவானூர்தி...

## கலைவாணி சனசமூக நிலைய புதிய நிர்வாகக் குழு தெரிவு

வட்டக்கச்சி ஆறுமுகம் வீதி சந்திப்பகுதியில் அமைந்துள்ள கலைவாணி சனசமூக நிலைய புதிய நிர்வாகசபைத்தெரிவும் அதனை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கான முக்கிய கலந்துரையாடலும் முருகன் ஆலய முன்றலில் அண்மையில் நடைபெற்றது.

மேலும் இச்சனசமூக நிலையத்தை அப்பகுதி மக்கள் சிரமதானம் மூலம் துப்புரவு செய்துள்ளனர். சனசமூக நிலைய கட்டடம் புனரமைப்பு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (12)

## வீதியோர மரங்கள் பலவும் மின்கம்பங்களாக மாற்றம்!

### -ஆபத்துக் குறித்து மக்கள் அச்சம்

இராமநாதபுரம் கல்மடுநகர் பகுதிகளில் பாதுகாப்பற்ற முறையில் மின் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.இது பற்றி மேலும் தெரியவருவதாவது; அப்பகுதிகளில் மின் பிறப்பாக்கி மூலம் மக்களுக்கு மின் விநியோகம் பச்சை மரங்களில் மின்கம்பிகளை இணைத்து வழங்கப்பட்டு வருகின்றது. அதில் சில மின் கம்பிகள் தகுதியற்ற வையாகவும் காணப்படுகின்றது. அவை அறுந்து விழுந்து விபத்துக்கள் ஏற்பட ஏதுவாக இருக்கின்றது. எனவே மக்களுக்கு தமது சேவையை வழங்கி வருகின்ற மின் வழங்கல் உரிமையாளர் எந்தவித அசம்பாவிதங்களும் ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்ளும் முகமாக தகுதியான முறையில் தமது சேவையைத் தொடர வேண்டப்படுகின்றது. (12)

# ஜே.வி.பி.-சந்திரிகா அணியினரிடையே உள் முரண்பாடு தீவிரம் அடைகின்றது!

மகிந்த ராஜபக்ஷவை பிரதம மந்திரியாக நியமித்தமை உட்பட அமைச்சர் நியமனங்கள், அமைச்சுக்களின் பிரதான பணிகள் மாற்றியமைக்கப் பட்டமை போன்றன தொடர்பாக, ஜே.வி.பி.க்கும் சந்திரிகாவின் அணிக்கும் இடையில் கடும் முறுகல் நிலை தோன்றியுள்ளது. ஜே.வி.பி.யின் செயலாளர் நாயகம் ரில்வின் சில்வா, சனாதிபதி சந்திரிகாவுக்கு எழுதியுள்ள மிகவும் காரசாரமான கடிதத்தில், இவற்றை விபரமாகத் தெரிவித் திருக்கிறார்.

தேர்தலுக்கு முன்னரும் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட நிலையிலும், லக்ஷ்மன் கதிர்கா மரையே பிரதம மந்திரியாக நியமிக்கும்படி கேட்டபோது, சனாதிபதி சந்திரிகா அதற்கு இணக்கம் தெரிவித்திருந்ததாகவும், ஒரு பௌத்த சிங்களவரை நியமிக்கும் தேவையிருந்திருந்தால் கூட, அநுரா பண்டாரநாயக்காவை அல்லது மைத்திரிபால சேனநாயக்காவை நியமித்திருந்தால், அது தமக்கு திருப்தியளித்திருக்கும் என்றும் அக்கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பிரதம மந்திரியாக நியமிக்கப்படக் கூடாது என்று மகிந்த ராஜபக்ஷ விடயத்தில் தாம் அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்திருந்தும், சந்திரிகா தான்தோன்றித் தனமாக எடுத்துள்ள அந்த முடிவு, தமக்கு மிகவும் அதிருப்தி அளிப்பதாக உள்ளதாக அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கையில்;

சுதந்திரக் கட்சியின் சார்பில் 65 ஆசனங்களும், ஜே.வி.பி. சார்பில் 40 ஆசனங்களும் பாராளுமன்றத்தில் உள்ளன. தற்போது சுதந்திரக் கட்சிக்கு 31 அமைச்சுக்களும், 31 பிரதி அமைச்சுக்களும் வழங்கப்பட்டுள்ளன. ஜே.வி.பி.க்கு 4 அமைச்சுக்களும் 4 பிரதி அமைச்சுக்களும் வழங்கப்பட்டுள்ளன. அமைச்சுக்கள் வழங்கப்பட்ட விகிதாசாரப்படி பார்க்கையில், இது மிகவும் முரண்பாடாக அமைந்துள்ளன. 65 ஆசனங்களுக்காக 62 பதவிகளும், 40 ஆசனங்களுக்காக வெறும் 8 பதவிகளும் வழங்கப்பட்டுள்ளமை மிகவும் நேர்மையற்ற பதவி வழங்கலை வெளிக்காட்டுகிறது. இது நாம் ஏற்கனவே பேசி ஏற்றுக் கொண்ட இணக்கப்பாடுகளுக்கு மிகவும் முரணானது. தரப்பட்ட நான்கு அமைச்சுக்களிலும், எம்மைக் கலந்தாலோசிக்காது, தந்திரமாக சில பணிகளை அவ்வமைச்சுக்களிலிருந்து நீக்கியுள்ளமை குறித்து நாம் விசனமடைகிறோம். குறிப்பாக;

1) விவசாய மற்றும் நிலவள அமைச்சிலிருந்து எம்மைக் கேட்காது திடீரென மகாவலி அபிவிருத்திப் பணியை நீக்கியுள்ளமை.

2) கலாசார அமைச்சிலிருந்து சிறிலங்கா திரைப்படத் துறையையும் திரைப்பட சென்சார் துறையையும் நீக்கியுள்ளமை.

3) கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சிலிருந்து கிராமிய வங்கி உட்பட நிதி நிறுவன முகாமைத்துவத்தை நீக்கியுள்ளமை.

4) தொழில்வள அமைச்சிலிருந்து சில முக்கிய பணிகளை நீக்கியுள்ளமை.

ஜே.வி.பி.யும் கூட்டணியின் பிரதான அங்கம் என்ற வகையில், இவை குறித்து பேசித் தீர்வு காணப்பட்டிருக்க வேண்டும். அதற்கு மாறாக, எந்தவித முன்னறிவித்தலுமின்றி, தந்திரமாக, இந்த அமைச்சுக்களின் பொறுப்புக்களைப் பிரித்தெடுத்துவிட்டு, வழங்கியிருப்பது மிகவும் பெரிய குற்றம் என்றும் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஒரு சில நாட்களுக்குள் எழுத்து மூலம் தமது கட்சியின் தலைமைக்கு, சனாதிபதி சந்திரிகா பதில் தரவேண்டும் என்றும் அக்கடிதத்தில் கோரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கருணாவின் துரோகத்தால் குதுகலித்தோருக்கு பெரும் அதிர்ச்சி!

சிறிலங்காவிலுள்ள பௌத்த -சிங்கள பேரினவாத சக்திகளும் சரி, கொழும்பு அரசியல் தலைமைகளும் சரி பெரும்பாலான இராணுவ- அரசியல் விமர்சகர்களும்சரி இத்தகைய .விரைவில் கருணாவின் நிலை இவ்வாறு மாறும் என எதிர்பார்க்கவில்லை. இம்மாற்றமானது அவர்களின் எதிர்காலக் கனவுகள் ஆருடங்கள், எதிர்வு கூறல்கள் என்பனவற்றையெல்லாம் பொய்ப்பிப்பன வாகிவிட்டன.

கருணா விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து தனியாக இயங்கப் போவதாக அறிவிப்புச் செய்தபோது தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் எதிரான சக்திகள் துள்ளிக் குதித்தன. கொழும்பிலுள்ள பேரினவாத அரசியல் சக்திகள் பெரும் விருந்துபசாரங்களைக் கூட நடத்தின. இவர்கள் இவ்வாறு துள்ளிக் குதித்ததற்கும், கூப்பாடு போட்டதற்கும், கருணாவின் செயலானது, தமிழ்த் தேசியத்தையும் விடுதலைப்புலிகளையும் பலவீனப்படுத்தி தமிழ் மக்களின் உரிமைக்கான



போராட்டத்தையே உருக்குலைத்துவிடும் என்ற முடிவிற்கு அவர்கள் வந்திருந்தமையே காரணமாகும்.

இவ்வாறு அவர்கள் துள்ளிக் குதித்ததற்குக் காரணமும் இல்லாமல் இல்லை. கருணாவின் கீழ் இருந்த விடுதலைப் புலிப்போராளிகளின் எண்ணிக்கை, அவர்களிடம் இருந்த ஆயுத தளபாடங்கள், கருணா தொடர்பாக இருந்த மதிப்பீடு என்பனவற்றோடு கருணாவின் வாய் வீச்சு என்பனவும் காரணமாக இருந்தன.

இந்நிலையில் விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சு வார்த்தைகள் பாதிப்பிற்கு உள்ளாகினும் கவலைகொள்ளத் தேவையில்லை. கருணாவைப் பயன்படுத்தி தமிழர் தேசியம் விடுதலைப் புலிகளின் பலம், என்பனவற்றைச் சிதைக்க வேண்டும் என்பதே பௌத்த சிங்கள பேரினவாத சக்திகளின் ஒரே நோக்கமாக இருந்தது.

சிங்கள புத்திஜீவிகளில் தலைவரை ஒருவராகக் கருதுபவரும், அரசியல் ஆய்வாளருமான தயான் ஜெயதிலக்க போன்றவர்களும் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க போன்றவர்களும் இதனை வெளிப்படையாகவே பேசத்தவறவில்லை. தயான் ஜெயத்திலக்க தனது கட்டுரை ஒன்றில் "இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தாது விடில் சிங்களவர்கள் மடையர்களாகவே இருப்பர்" எனக் கூறியிருந்தார். ஜே.வி.பி. தலைவர் அமரசிங்கவோ இம்முரண்பாட்டைப் பயன் படுத்தி புலிகளைத் தோற்றகடிக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தரப்பினர் கருணாவுடன் நேரடியான உறவுகளை வெளிப்படுத்தாத போதும் கருணா தரப்பிற்கு அனுசரணையாகவே செயற்பட்டனர். சிறிலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவு கருணாவுடன் நெருக்கமான உறவைக் கொண்டிருந்த அதேவேளை கருணாவின் தேவைகளையும் நிறைவு செய்யத் தயாராகவே இருந்தது.

சனாதிபதி சந்திரிகா தரப்பு கருணா குழு மீது அக்கறை கொண்டிருந்தது என்பதற்கு பல எடுத்துக் காட்டுக்களைச் சுட்டிக்காட்ட முடியும். இதில் சிறிலங்கா அரசின் கட்டுப்பாட்டில் உள்ள அரச வானொலி மற்றும் தொலைக் காட்சி என்பன கருணாவிற்கு ஆதரவாகச் செயற்பட்டமை வெளிப்படையானதொன்று. அதேவேளை சிறிலங்கா படைத்தரப்பு கருணாவுடன் நெருக்கமான தொடர்பைக் கொண்டிருந்தது. குறிப்பாக இராணுவத்தளபதி பலகல்ல கருணாவுடன் நெருக்கமான தொடர்பையும் கொண்டிருந்தார்.

இவையாவற்றையும் உறுதிப்படுத்துமாப் போல், கருணாவிற்கு தஞ்சம்அளிக்க சிறிலங்கா அரசு தயாராக இருப்பதாக அறிவிப்புச் செய்துள்ளமையானது கருணா மீது சனாதிபதி சந்திரிகா தரப்பு கொண்டிருந்த அக்கறையைச் சுட்டிக்காட்டுவதாய் இருந்தது.

அதேசமயம் கருணாவின் செயற்பாட்டால் ஆனந்தமடைந்தவர்களில் ஈ.பி.டி.பி.யின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா போன்றவர்களும் இருந்தனர். கருணா குற்றம் செய்ததிற்காக புலிகள் அமைப்பிலிருந்து வெளியேறப்பட்டார் என்பது தெரிந்திருந்தும் கருணாவிற்கு ஆதரவளிக்க அவர் முன்வந்திருந்தார்.

ஆனால் கருணா ஒரு துரோகியாக- காட்டிக்கொடுப்பவனாக மாறும் பட்சத்தில், பௌத்த- சிங்களப்பேரினவாத சக்திகளுடனும், தமிழ்இன விரோதக் குழுக்களுடனும் உறவுகள் வலுப்படும் என்பதும் எவரும் எதிர்பார்க்காத ஒன்றல்ல. கருணா தனித்து இயங்குவதாக அறிவிப்புச் செய்தவுடனேயே இன்னுமொரு துரோகி உருவாகி விட்டான் என்பதாகவே அது தமிழ்மக்களால் உணரப்பட்டும் கொள்ளப்பட்டும் இருந்தது.

ஆனால், விடுதலைப் புலிகள் மீட்புப் பணியைத் தொடங்கியபோதே கருணா குறித்துத் தாம் கொண்டிருந்தது மாயை என்பதும் தமிழ்த்தேசியம். விடுதலைப் புலிகளின் பலம், தேசியத் தலைமைத்துவத்தின் ஆற்றல் என்பன குறித்துத் தாம் தவறான மதிப்பீடு ஒன்றைச் செய்துகொண்டிருந்தமையும் பலருக்குப் புரிந்திருக்கும்.

கருணாவின் இராணுவ ஆற்றல் குறித்து நம்பிக்கை கொண்டிருந்தவர்கள் விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியில் மீட்பு நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டால் புலிகள் தரப்பினர் பெரும் விலை கொடுக்க வேண்டிவரும் என்றே நம்பிக்கை கொண்டிருந்தனர். இது விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் பெரியளவில் பலவீனப்படுத்தும் எனவும் அவர்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

இதேவேளை சிறிலங்கா அரச தரப்பும் கருணாவிற்கு ஆதரவு அளிக்குமானால் விடுதலைப் புலிகளை மேலும்பலவீனப்படுத்தும் என்பதும் இவ்விருதரப்பும் மீள முடியாத ஒரு சண்டைக்குள் சிக்கிக்கொள்ளும் நிலையில் தமிழீழ விடுதலைப்போராட்டம் என்பது பெரிதும் பலவீனப்பட்டதாகிவிடும் என்பதே அவர்களின் மதிப்பீடாகும்.

இது மாத்திரமல்ல விடுதலைப் புலிகளின் கருணா மீதான நடவடிக்கையானது ஒரு கட்டத்தில் ஏதோ ஒரு வகையில் யுத்த நிறுத்த உடன்பாட்டை மீறுவதாக அமையும் எனவும் நம்பிக்கை கொண்டிருந்தன. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி புலிகளுக்கு எதிரான யுத்தத்தை முனைப்புப் படுத்தலாம் எனவும் இதன் மூலம்கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி என்பதை இல்லாது ஒழித்துவிடலாம் என்பதும் அவர்களின் எதிர்பார்க்கையாக இருந்தது.

அடுத்ததாகக் கருணா கையிலெடுத்துக்கொண்ட பிரதேசவாதமானது 'தமிழர் தேசியம்' என்ற கோட்பாட்டை சிதைவிற்கு உள்ளாக்கிவிடும் என்பதும் அவர்களின் எதிர்பார்ப்பாகும். கருணாவின் பிரதேசவாதத்திற்கு தூபமும் தூண்டுதலாக இருப்பதன் மூலம் தமிழர்தாயகத்தைப் பிளவு படுத்தி தேசியத்தையும் சிதைத்துவிடலாம் என்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது.

ஏற்கனவே தமிழர்தாயகத்தையும், தேசியத்தையும் சிதைக்கும் வகையிலான நடவடிக்கைகளில் சிங்கள பேரினவாத சக்திகள் ஈடுபட்டு வருகின்றமை வெளிப்படையானது. இந்நிலையில் கருணாவின் செயற்பாடுகள் அவர்களுக்குப் புத்துயிர்ப்பையும் நம்பிக்கையும் கொடுப்பதாக இருந்தது.

ஆனால் கடந்த காலத்தில் வடக்கையும் கிழக்கையும் பிரித்துவிடுவதற்கென சிங்களப் பேரினவாத சக்திகள் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தமை வரலாறாகும். காலத்திற்குக் காலம்இனவிரோத சக்திகளைப் பயன்படுத்தி இத்தகைய முயற்சிகளால் மேற்கொள்ளப்பட்டதாயினும் அவை தோல்வியிலேயே முடிவடைந்ததுண்டு.

வேறுவிதமாகக் கூறுவதானால் பிரதேசவாதம் என்பது அரசியல் ஆதாயம் தேடும் வகையில் சில சுயநல அரசியல்வாதிகளால் முன்னெடுக்கப்பட்ட விடயமாக இருந்ததே பொழிய தமிழ் மக்கள் மத்தியில் காணப்பட்ட பிளவாகவோ அன்றிப் பிரிவினையாகவோ இருந்ததில்லை ஆகையினால் பிரதேசவாதத்தைக் கையிலெடுத்தவர்கள் எல்லாம் இறுதியில் தோல்வி கண்டனர் கடந்த காலப் படிப்பினையாகும்.

தமிழர் தேசியம் விடுதலைப் புலிகள் அமைப்பு என்பனவற்றைப் பலவீனப்படுத்துவது மட்டுமல்ல, தமிழீழத் தேசியத்தலைமை என்பதைப் பலவீனப்படுத்துவதென்பது தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்திற்கு எதிரான அனைத்துச் சக்திகளின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்று.ஏனெனில் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் தலைமைத்துவமானது எத்தகைய இடையூறுகளையும் தாண்டி தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்துச்செல்லும்' என்பது அவர்களுக்கு நன்கே தெரியும்.இதற்கு கடந்த வரலாறே போதுமான சான்றாகும்.

தமிழ் மக்களின் உரிமைப்போராட்டம் சந்தித்த சவால்கள் நெருக்கடிகள் காட்டிக்கொடுபபுக்கள் என்பனவற்றையும் தாண்டி இன்றைய நிலைக்கு அதனை வளர்த்தெடுத்தமைக்குத் தமிழீழத் தேசிய தலைமையின் ஆற்றலே காரணமாகும். இந்நிலையில் தமிழீழத் தேசியத் தலைமைக்கு விரோதமான கருணாவின் நடவடிக்கையானது அதனைப் பலவீனப்படுத்திவிடும் என்பதே பௌத்தசிங்கள-பேரினவாதத்தினதும் சிறிலங்கா அரசியல் தலைமையினதும் எதிர்பார்ப்பாகும்.

ஆனால் இவையாவும்இன்று கற்பனைணயாகிப் போயுள்ளன. ஒருவகையில் பார்த்தால் இதற்கு எதிர்மறையான நிகழ்வுகளே நடந்தேறியுள்ளன. தமிழர் தேசியம் என்பது சிதைக்க முடியாததொன்று என்பது மீண்டும் ஒரு தடவை உறுதியாக வெளிப்படுத்தப்பட்ட தொன்றாகியுள்ளது.

அதாவது குறுகிய பிரதேசவாதம் என்பது தமிழ் மக்களிடம் தோல்விகண்டுள்ளது. சிலரின் அபிலாசைகளுக்கு மக்கள் செவிசாய்க்கவோ அன்றி அவர்களின் பின் செல்லவோ தயாராக இல்லை என்பது நிரூபணம் செய்யப்பட்டதாகவுள்ளது.

அடுத்ததாக விடுதலைப் புலிகளின் பலத்தைச் சிதைத்தல் என்பது சாத்தியப்பாடானதாக இருக்கப்போவதில்லை என்பதும் ஒருசிலர் செய்யும் துரோகத்தனத்திற்குப்போராளிகள் ஒருபோதும் துணைநிற்கப் போவதில்லை என்பதும் வெளிப்படுத்தப்பட்டதாகியுள்ளது.

துரோகம்புரிய முற்படுவோர் பின்னால் ஒரு சிலர் இருப்பின் அவர்களும்கூட சுயநலம் மிக்கவர்களாகவும், கடந்த காலத்தில் தாம் இழைத்த தவறுகளுக்கு எவ்வகையிலும் விளக்கம் அளிக்க முடியாதவர்களாகவுமே இருத்தல் முடியும். இத்தகையவர்கள் ஒரு உயரிய நோக்கத்திற்காக போரிடும் அமைப்பிலிருந்து வெளியேறுகின்றமை இவ்வமைப்பிற்கு எந்த வகையிலும் பாதகமானதாக ஆகிவிட முடியாது. மாறாக நல்லதாகவே அமையக் கூடியதாகும்.

அத்தோடு, தமிழீழத் தேசியத் தலைமையை கருணா போன்றவர்களின் செயற்பாடுகள் மேலும் வலுமிக்கதாக ஆக்குவதாக அமையுமே ஒழிய அதனைப் பலவீனப்படுத்துவதாக அமைந்துவிடப்போவதில்லை. அதாவது தேசியத் தலைமையின் ஆற்றலை இத்தகைய சம்பவங்கள் வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பைக் கொடுப்பதோடு, மக்கள் தேசியத் தலைமை மீது கொண்டுள்ள நம்பிக்கையையும் வெளிப்படுத்துவதாகவே அமையக் கூடியதாகும்.

இவை யாவற்றிற்கும் மேலாக கருணாவின்செயலும், அதன் விளைவுகளும் சிறிலங்கா அரசிற்கும் சர்வதேச சமூகத்திற்கும் சில முக்கிய தகவல்களை வெளிப்படுத்துவதாய் உள்ளன. அதாவது தமிழர் தேசியம் என்பதும், தாயகம் என்பதும் குலைவிற்கோ அன்றி பிளவிற்கோ உட்படுத்தப்படக் கூடியதொன்றல்ல என்பதும் தமிழீழத் தேசியத் தலைமை என்பது மிகவும் உறுதியானதும் பலமானதும் ஆகையினால் அதற்கெதிரான செயற்பாடுகள் மூலம் தமிழ்மக்களின் உரிமைப்போராட்டத்தை பலவீனப்படுத்திவிடலாம் என முற்படுவது வெற்றியளிக்கமாட்டாது என்பதுவுமே அவையாகும். □

ஜெயராஜ்

# நிரந்தர சமாதானம், பொருளாதார அபிவிருத்திக்கு அரசியலில் ஸ்திரநிலை அவசியமானது

## - சனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

(கொழும்பு)

**நிரந்தர சமாதானம் மற்றும் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு அரசியலில் ஸ்திரநிலை இருக்க வேண்டியது அத்தியாவசியமானது என சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமார துங்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்; ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சிபீடம் ஏறினால் புதிய அரசியல் யாப்பொன்றை ஏற்படுத்தும் என தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்தது. பிரச்சார மேடைகளிலும் இது தொடர்பான கருத்துக்களை தெரிவித்து வந்தது. இதற்குப் பொதுத் தேர்தல் மூலமாக மக்கள் ஆணைவழங்கியுள்ளனர் எனவும் கூறியுள்ளார்.

சனாதிபதி இது தொடர்பாக தொடர்ந்து தெரிவிக்கும் போது; சுதந்திரக் கூட்டமைப்பு தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதி வழங்கியதற்கமைய சர்வசன வாக்கெடுப்பொன்றை நடத்துவதன் மூலம் புதிதாக உருவாக்கப்படவுள்ள அரசியல் யாப்பிற்கு மக்களின் விருப்பத்தைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் தெரிவித்தார்.

ஆயிரத்துத்தொழாயிரத்து நாற்பத்தெட்டாம் ஆண்டு முதல் இது வரை நடை முறையில் உள்ள அரசியல் யாப்புக்குறித்து மக்களின் விருப்பத்தை அறிந்து கொள்ளவில்லை எனவும் இம்முறை சர்வசன வாக்கெடுப்பை நடத்துவதன் மூலம் மக்களின் விருப்பத்தை அறிந்து உருவாக்கப்படும் அரசியல் யாப்பாக அமைய உள்ளதென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் யாப்பு மறுசீரமைப்புத் தொடர்பாக சனாதிபதி மாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே சனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலின் போது சனாதிபதியின் ஆலோசகரும், சட்டவல்லுனர்கள் சிலரும் கலந்து கொண்டதாகவும் சனாதிபதி மாளிகைவிடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

# முல்லை. காவல் பணிமனையில் அன்னை பூபதி நினைவு நிகழ்வு

(முல்லை)

தியாகி அன்னை பூபதியின் நினைவு நாள் நிகழ்வு முல்லைத்தீவு காவல்பணிமனையில் தொடர்ச்சியாக நினைவு கூரப்பட்டுவருகின்றது.

கடந்த ஞாயிறன்று காவல்துறை உறுப்பினர் செல்வி றாதிகா தலைமையில் நிகழ்வு ஆரம்பமானது. பொது ஈகச்சுடரினை காவல்துறை உறுப்பினர் திருமதி சு.ஜெகதீஸ்வரி ஏற்றினார்.

தமிழீழத் தேசியக்கொடியினை காவல்துறை உறுப்பினர் பெருமுதினி ஏற்றினார். திருவுருவப்படத் திற்கான ஈகச்சுடர் ஏற்றலைத் தொடர்ந்து மலர் வணக்கத்தினை முல் லைகாவல் பணிமனை உறுப்பினர் சி.ஞானவேல் ஆரம்பித்து வைத்தார். (20)

# கொழும்பில் தயாரிக்கப்பட்ட பவல் படையினரிடம் கையளிப்பு

வடக்கு கிழக்கு பிரதேசங்களில் கடமையாற்றும் படையினரின் பயன்பாட்டுக்கென கொழும்பில் தயாரிக்கப்பட்ட பவல் கவசவாகனங்களை பகிர்ந்தளிக்கும் வைபவம் நாளை நடைபெறவிருக்கிறது.

இராணுவத் தளபதி லயனல் பலகல்ல தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் விசேடப்படை தலைமைப் பரிசோதகர் நிமல் லியுக் கலந்து கொண்டு வாகனங்களை கையேற்கவுள்ளார். இவ் வாகனங்கள் முன்னர் தென் ஆபிரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டபவல் கவசவாகனத்தை ஒத்ததாகும்

# களுவாஞ்சிக்குடி - வெல்லாவெளி வீதியில் அதிகாலை கோர வாகன விபத்து

## -சிறுவன் பரிதாப மரணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி-வெல்லாவெளி வீதியில் நேற்று அதிகாலை வாகன விபத்தொன்று நடந்துள்ளது.

இந்த விபத்தில்,என்- உதய குமார்(வயது15) என்பவர் உயிரிழந்துள்ளார். இவரது சடலம் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிசார் கூறியுள்ளனர்.

இதேவேளை இந்தவிபத்து குறித்து தமக்கு எந்த விதமான தட யங்களும் கிடைக்கவில்லை என்றும் பொலிஸ் உயரதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

# மனித உரிமை மீறல் முறைப்பாடுகளின் விசாரணைகள் ஒரு மாதத்தில் பூர்த்தி

## -மனித உரிமை ஆணைக்குழு தீர்மானம்-

(கொழும்பு)

மனிதஉரிமைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகளை ஒரு மாதத்திற்குள் விசாரித்து முடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பொலிசாரினால் கைது செய்யப்பட்டு பல்வேறு இன்னல்களுக்கு உட்படுவோரின் முறைப்பாடுகளே இவ்வாறு துரிதமாக விசாரிக்கப்படவுள்ளது. இதற்கான விசேட திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அந்த ஆணைக்குழுவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்,

இந்த புதிய திட்டம் தொடர்பாகநாடுமுழுவதிலுமுள்ள ஆணைக்குழுவின் பிராந்திய [illegible]வலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. முறைப்பாடு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டதுடன் அது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினரை அழைத்து விசாரணைகள் நடத்தப்படும். சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கையும் கோரப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படும்.

இவ்வாறான மனித உரிமை மீறலுடன் தொடர்புடைய பொலிசாருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் அடங்கிய பரிந்துரை பொலிஸ்மா அதிபரிடமும் சட்டமா அதிபரிடமும் சமர்ப்பிக்கப்படும் என அவர் கூறினார்.

# பூந்தோட்டம் பகுதியில் உபதபாலகம் அமைக்கக்கோரல்

(வவுனியா செய்தியாளர்)

பூந்தோட்டம் பகுதியில் உபதபாற்கந்தோர் ஒன்றினை அமைக்குமாறு அப்பகுதி மக்கள் கோருகின்றனர்.

பூந்தோட்டம் பகுதியில் அண்ணா நகர்,சிறிநகர்,காந்தார் சின்னக்குளம்,மகாறம்பைக்குளம், சருக்குப்பனிச்சங்குளம், சிறிராமபுரம் ஆகிய கிராமங்கள் உள்ளன. இவற்றிற்கான தபால் விநியோகங்கள் வவுனியா பிரதம தபாலகத்தில் இருந்தே மேற்கொள்ளப்படுகின்றன.

இப்பகுதி மக்கள் தமது தபாலகத் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டுமேயானால் வவுனியா பிரதம தபாலகத்திற்கே செல்ல வேண்டி உள்ளது அங்குசென்று பலமணிநேரம் காத்திருந்தே, தமது தேவைகளை நிறைவேற்ற வேண்டியிருப்பதாக இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே தான் இப்பெரும் பகுதி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியவகையில் பூந்தோட்டம் பகுதியில் உபதபாற்கந்தோர் ஒன்றினை அமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோருகின்றனர். (10)

# மதகு உடைந்ததால் போக்குவரத்து பாதிப்பு

(கிளிநொச்சி)

அக்கராயன் அண்ணா சிலையடிப் பகுதியில் வீதி மதகு ஒன்று சேதமடைந்து உள்ளது. போக்குவரத்து செய்வதில் மக்கள் பலத்த அசௌகரியப்படுவதுடன் இதனால் விபத்துக்களும் ஏற்பட வாய்ப்புள்ளது என மக்கள் விசனப்படுத்துகின்றனர். (15)

# தற்கொலை

(கிளிநொச்சி)

அக்கராயன் காந்தரூபன் குடியிருப்பில் குடும்பப்பெண்ணொருவர் அலரிவிதை உட்கொண்டு தற்கொலை செய்துள்ளார்.

அக்கராயன் காந்தரூபன் குடியிருப்பைச் சேர்ந்த அன்ரன் ஜெயபாலன் சகாயராணி (வயது 30) என்ற மூன்று பிள்ளைகளின் தாயாரே நேற்றுமுன்தினம் மதியம் 12மணியளவில் தற்கொலை செய்துகொண்டுள்ளார். இது தொடர்பான விசாரணைகளை அக்கராயன் காவல்பணிமனையினர் மேற்கொண்டுவருகின்றனர். (15)

# வைத்தியசாலை வளாகத்தில் தங்கியுள்ள இடம்பெயர்ந்தோரை வெளியேற நிர்ப்பந்தம்!

## சொந்த இடங்களில் குடியமர படையினர் தடை

வலிகாமம்.வடக்குப்பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து வந்து இணுவில் வைத்தியசாலையில் தற்காலிகமாக குடியமர்ந்துள்ளோரை அங்கிருந்து அகலுமாறு சம்பந்தப்பட்ட வைத்தியசாலை நிர்வாகத்தினர் நிர்ப்பந்தித்து வருகின்றனர். இதனால் இங்கு தற்காலிகமாக குடியமர்ந்துள்ள குடும்பங்கள் பெரும் அவலநிலையை எதிர்கொண்டுள்ளனர்.

வலிகாமம் வடக்குப் பகுதிகளை ஆக்கிரமித்துள்ள சிறிலங்காப் படையினர் அப் பிரதேசத்தில் உள்ள மக்களின் வாழ் விடங்களை இராணுவ அதிஉயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தி வைத்துள்ளனர். மக்களை தமது சொந்த இடங்களில் குடியமர அனு மதிமறுத்துள்ளனர்.

இதனால் இப்பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்து தமது சொந்த இடங்களில் குடியமர முடியாதுள்ள இவர்களில் ஒரு தொகுதியினர் இணுவில் வைத்தியசாலை வளாகத்தினுள் குடியமர்ந்துள்ளனர் இந்நிலையில், இவ் வைத்தியசாலையைப் புனரமைக்க வேண்டிய தேவையிருப்பதால் தற்காலிகமாக குடியேறியுள்ள 30குடும்பங்களை அகன்றுவிடுமாறு கூறி வைத்தியசாலை நிர்வாகத்தினர் நிர்ப்பந்தித்து வருகின்றனர்.

இதன்காரணமாக இம்மக்கள் பலத்த இன்னல்களை அனுபவித்து வருவதுடன் தமது சொந்த இடங்களில் குடியமர அனுமதிக்கக் கோரி போராட்டங்களை நடத்தப்போவதாகவும் தெரிவித்து வருகின்றனர். (33)

# ஆடைகள் வழங்கல்

உயிர்த்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு அன்றையதினம்மன்னார் நகரக்கத்தோலிக்க மக்களால் மன்னார் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள 250 ற்கும் மேற்பட்டவர்களுக்கு மதியவுணவுகளும், ஆடைகளும்வழங்கப்பட்டன. (மி)


# ஓராண்டு நினைவஞ்சலி

அமரர்

## செல்லையா சபாபதி

(ஓய்வுபெற்ற நீர்ப்பாசன பிரிவு உதவியாளர்)

கைதடி நாவற்குழி

திதி:-14.04.2004 (தசமி)



ஆளுமையின் பெருமைகளாய்
கணவன்,தொண்டன், தந்தை எனும் பதங்களின் இலக்கணமாய்
கனிவாய்,கண்டிப்பாய் கல்வியுடன் உடவுளவுறுதிதந்து
வாழ்வுப் பயண ஆழம் சொல்லி எமைத் தழைத்தோங்க விட்டவரே.
"சந்ததியாய் தழைக்கும் என்றும் உன் நினைவு"

மலர்வு:- 02-07-1938
உதிர்வு:- 25-04-2003


இல -179,
"சபாபதி பவனம்"
உதயநகர் கிழக்கு
கிளிநொச்சி..

உங்கள் ஆத்மசாந்திக்காகப்
பிரார்த்திக்கும்
மனைவி. பிள்ளைகள்

(4361)


# துயர் பகிர்வோம்

பிறப்பு 07 - 05 - 1947



மறைவு 07 - 04 - 2004

## சுப்பையா வேலாயுதம்

(முன்னாள் ஈழநாதப் பணியாளர்)

அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு நாம் மிகுந்த துயருறுகின்றோம். அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சொந்த முகவரி:-
சரவணைகிழக்கு
வேலணை,
யாழ்ப்பாணம்

தற்போதைய முகவரி:-
அம்பாள்குளம்,
கிளிநொச்சி.

பொறுப்பாளர்,
பணியாளர்கள்.
ஈழநாதம்



**சிந்தனைக்கு**

எமது வீர சுதந்திர வரலாறு மாவீரர்களின் இரத்தத்தாலும், வியர்வையாலும், கண்ணீராலும் எழுதப்பட்டிருக்கின்றது.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 14 -04-2004

## அரசாங்கம் எங்கு செல்கிறது!

கருணா விரும்பினால் அவருக்குப் புகலிடம்அளிக்கப்படும் என சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் அறிவித்துள்ளமையானது, கருணா தொடர்பான நிலைப் பாட்டில் மட்டுமல்ல, விடுதலைப் புலிகள் தொடர்பான விட யத்தில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான அரசாங்கம் கொண்டுள்ள நிலைப்பாடு குறித்தும் பல கேள்வி களை எழவைக்கிறது.

கருணா விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து வெளி யேற்றப்பட்டபோதே அவருக்கு சிறிலங்கா அரசு புகலிடம் அளிக்கும் என்பது எதிர்பார்க்கப்பட்டதென்றே இனவிரோத சக்திகளுக்கும், துரோகக் கும்பல்களுக்கும் சிங்கள ஆளும் வர்க்கம் எப்பொழுதும்பாதுகாப்பும், வசதிகளும் ஏற்படுத் திக்கொடுப்பதென்பது வழமையானதொன்றே. அதாவது இனவிரோத சக்திகளின் பாதுகாப்பு மிக்க வாழ்விடமாக சிறிலங்காவே இருந்து வருகின்றது.

இந்நிலையில் கருணாவிற்கு சிறிலங்கா அரசு பாதுகாப்பு வழங்க முன்வந்துள்ளமை என்பது ஆச்சரியத்திற்குரியதல்ல. ஆனால், அதனை சந்திரிகாஅரசாங்கம்வெளிப்படையாக பகிரங்கப்படுத்தியுள்ளமையும், அது வெளிப்படுத்தியுள்ள சந்தர்ப்பமுமே இன்று முக்கியத்துவம் மிக்கதொன்றாகவும். சனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க அரசாங்கம் குறித்து சந்தேகங்களையும், கேள்விகளையும் எழுப்புபவையாகவும் உள்ளன.

விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட கருணாவிற்கு இன்று சிறிலங்கா அரசு பாதுகாப்பு அளிப் பென்பது விடுதலைப்புலிகளுக்கு எதிரான நிலைப்பாடு என்பதில் கேள்விக்கே இடமில்லை.ஏனெனில், தனிப்பட்ட ரீதியில் செயற்படப்போவதாக அறிவிப்புச்செய்த கருணா வின் நடவடிக்கைகள் முற்றிலுமாக விடுதலைப் புலிகளுக்கு எதிரான துரோக நடவடிக்கையாகும். வேறுவிதமாகக் கூறு வதானால் ஒருவகையில் காட்டிக்கொடுப்பதாகிவிடும்.

எடுத்துக்காட்டாக மீனகம் இராணுவ முகாமைப் பார்வை யிட பலரை அனுமதித்தமையும், விடுதலைப் புலிகளின் ஆயுத, தளபாடங்களைத் தமது ஆயுத தளபாடங்கள் என வெளிப்படுத்தியமையும், இயக்கத்திற்கும், தமிழீழ விடுதலைப்போராட்டத்திற்கும்செய்த துரோகமாகும். இந்நிலையில் கருணாவைப் பாதுகாக்க சிறிலங்கா அரசு முற்படுவதென்பது புலிகளுக்கு எதிரான நடவடிக்கை எனக் கொள்ளாது வேறு எவ்வாறு கொள்ள முடியும்?

இது ஒருபுறம் இருக்க, அரசாங்கம் பதவி ஏற்றதும் விடு தலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் எனக் கூறிவரும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கருணாவிற்குப் பாதுகாப்பு அளிக்க முன்வந்திருப்பதன் மூலம் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பான அவர்களின் நிலைப்பாட்டைச் சந்தேகிப்பது தவிர்க்க முடியாததொன்றாகிறது.

ஏற்கனவே, சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் கூட்டுச் சேர்ந்துள்ள ஜே.வி.பி. விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவது தொடர்பாகவும், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது தொடர்பாகவும் சாதகமான நிலைப்பாட்டைக் கொண்டதாக இல்லை. கருணாவைப் பயன் படுத்தி புலிகளுக்கு எதிரான இராணுவச் செயற்பாட்டை முனைப்புப்படுத்த வேண்டும் என்ற அபிப்பிராயத்தையே கொண்டுள்ளது.

இதேசமயம், ஐ.ம.சு.முன்னணி அரசாங்கத்திற்கு வெளி யில் இருந்து ஆதரவு அளிப்பதாக உறுதி கூறியுள்ள ஜாதிக ஹெல உறுமய இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் ஜே.வி.பி.யை விட கடுமையான போக்கை வெளிப்படுத்தும் ஒன்றாகவே உள்ளது.

இந்நிலையில், கருணாவிற்கும் அரசாங்கம் புகலிடம் அளிக்க முன்வந்துள்ளமையானது அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தையில் காட்டும் ஆர்வத்தைவிட யுத்தத்தில் காட்டும் ஆர்வமே அதிகமாகவுள்ளது என்பதையே வெளிக் காட்டுவதாய் உள்ளது. நாட்டில் தற்பொழுது நிலவும் சூழ் நிலை அரசாங்கத்தை அத்தகையதொரு சூழ்நிலைக்கு இட்டுச் செல்லக்கூடியதாகவுமே உள்ளது.

அதாவது, புதிய அரசாங்கம் ஸ்திரமானதாக இல்லாத தோடு, அது மக்களுக்கு அளித்துள்ள வாக்குறுதிகளும் பாரிய அளவினதாக நிறைவேற்ற முடியாதவையாகவுமே உள்ளன. இந்நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் என்பதைவிட யுத்தத்திற்கு செல்வதன் மூலம் மக்களின் கவனத்தைத் திசை திருப்பிவிடவும் அரசாங்கத்தை ஸ்திரப் படுத்திக் கொள்ளவும் முடியும். இதுவே அரசாங்கத்தின் தந்திரோபாயமா? என்பதே தற்பொழுது எழும் முக்கிய கேள்வியாகும்.

# ஐ.ம.சு.முன்னணி செயற்குழுக் கூட்டம் ஜே.வி.பி.யின் முடிவில் தங்கியுள்ளது

## -கூட்டணியின் பொதுச்செயலர் தெரிவிப்பு

கட்சிக்குள் எழுந்துள்ள சில பிரச்சி னைகளைத் தீர்த்துக் கொள்ளும் வகையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நடவடிக்கைக் குழுக் கூட்டம் பெரும்பாலும் இன்று புதன் கிழமை நடைபெறும் என்று சுதந்திர முன்னணியின் பொதுச் செயலர் சுசில் பிரேம் ஜயந்த் கூறியுள்ளார்.

அதே நேரம் இந்த கூட்டத்துக்கான திகதி, நேரம், என்பன சனாதிபதியின் பணிப்பினால்,ஜே.வி.பி.யினருக்கு நேற்றுமுன்தினம் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

அதே நேரம் ஜேவிபிக்கு இன்று நேரம் கிடைக்காத பட்சத்தில் இந்தத் திகதி மாற்றப்படலாம் என்றும் அதுவும் ஜே.வி.பி.யின வசதிக்கேற்ப மாற்றி யமைக்கப்படும் என்று கூறிய அவர், தற்போது கட்சிக்குள் எழுந்துள்ள சிக்கல் நிலைமை தீர்க்கப்பட்டு இன்னும் ஓரிரு நாட்களில் ஜே.வி.பியின் நான்குபேர் அமைச்சர்களாக சத்தியப் பிரமாணம் செய்து கொள்வார் களென்றும் அவர் கூறியுள்ளார்.

# சனாதிபதிக்கான பொதுத் தேர்தலில் ஜே.வி.பி. சார்பில் வேட்பாளர் நிறுத்தம்

(கொழும்பு)

2006 ஆம் ஆண்டு நடைபெற வுள்ள சனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி.யின் சார்பில் அக்கட்சியின் பிரச்சாரச் செயலர் விமல் வீரவன்ச போட்டியிடவுள்ளதாக அக்கட்சி கூறியுள்ளது. இதற்காகவே அவர் இம்முறை அமைச்சுப்பொறுப்பெதனை யும் ஏற்க வில்லை எனவும் தெரி விக்கப்படுகிறது.

நடந்து முடிந்துள்ள பொதுத்தேர்த லில் அவர் 2 இலட்சத்து 37 ஆயிரத்து 185 விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளார். இதன்மூலம் எதிர்வரும் சனாதிபதித்தேர்தலில் தனித்துப் போட்டியிட்டால் சுதந்திரக்கட்சியின் சனாதிபதியின் வேட்பாளரை விட கூடியளவு வாக்குகளைப்பெறலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாகவே அவர் தனித்துப் போட்டியிடத் தீர்மானித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை சுதந்திரக்கட்சி ஆதர வாளர்களிடையே விமல் வீரவன்ச வுக்கு பலத்த ஆதரவுள்ளதாகவும், இந்த ஆதரவை தக்கவைத்துக் கொள்ளவே அவர் இம்முறை அமைச்சுப்பதவியை ஏற்கவில்லை எனவும் கூறப்படுகின்றது.

# அரசியலமைப்பு சபையை உருவாக்க சனாதிபதி சந்திரிகா தீவிர ஆலோசனை

புதிய அரசியலமைப்புச் சபை யொன்றை அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக் கையாக தமது கட்சி உறுப் பினர்களையும் ஆலோசகர்களையும் கூட்டி சந்திரிகா கலந்தாலோசனை நடத்தியுள்ளார்.கடந்த வெள்ளியன்று சனாதிபதி மாளிகையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் தற்போதைய வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், ஜனாதிபதி சட்டத்தரணிக ளான,சுபைர்,ஜயம்பதி விக்கிரமரத்ன, ரஞ்சன் அமரசிங்க, குணசேகர பேராசிரியர் காமினி கிரவல்ல நைஜல் ஹெனவ் போன்ற நெருங் கிய ஆலோசகர்களும் பங்குபற்றினார்.

# இந்த சுதந்திர முன்னணி அரசாங்கம் நீண்ட ஆயுளைக் கொண்டதாக இல்லை

## முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன

(கொழும்பு)

இந்த அரசாங்கம் நீடித்து நிலைக் கக்கூடிய ஆயுள் கொண்டதாக இல்லை. இவ்வாறு ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பி னரும் முன்னாள் அமைச்சருமான ராஜித சேனரத்ன தெரிவித்துள்ளார்.

சிறிலங்காசுதந்திரக்கட்சியும் ஜே.வி.பி.யும் இணைந்து பாராளு மன்றத்தில் செயற்படுவது மிகவும் கடினமானது. ஐக்கிய தேசிய முன் னணி அரசாங்கத்தை கவிழ்ப் பதற்காகவே ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி உருவாக்கப்பட்டது. அதுதற்போது மக்களுக்கு தெளிவாக விளங்கியிருக்கிறது.

திறந்த பொருளாதார கொள் கையை முன்னெடுக்க ஜே.வி.பி.ஒரு போதும் உடன்படாது ஆனால், சிறி லங்கா சுதந்திரக்கட்சி கடந்த முறை அரசாங்கத்தை அமைத்திருந்த போது திறந்த பொருளாதார கொள்கையை பின்பற்றியது. என்வே இரு கட்சி களும் தற்போது கூட்டுச் சேர்ந் திருக்கும் நிலையில் எந்த வகையான பொருளாதார கொள்கையைப் பின்பற்ற போகின்றார்கள் என்ற கேள்வி மக்களிடம் எழுந்துள்ளது. விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும் என்ற விடயத்தில் கூட இரு கட்சி களிடையேயும் ஒருமித்த உடன்பாடு இல்லை. சமாதான பேச்சுவார்த்தை தொடர்ந்தால்தான் ஏனைய பிரச் சினைகளுக்கு தீர்வைக்காண முடி யும் என்றும் அவர் மேலும் கூறி யுள்ளார்.

## ஹேய்டன் பாராட்டு

பிறையன் லாறாவின் புதிய உலக சாதனையை அவுஸ்திரேலியத் துடுப்பாட்ட வீரர் மத்தியூ ஹெய்டன் பாராட்டியுள்ளார். இது குறித்து மத்தியூ ஹெய்டன் லாறாவுக்கு தொலைபேசி மூலம் வாழ்த்துக் கூறியிருப்பதுடன் இச்சாதனை தன்னை எதிர்பாராத அதிர்ச்சிக்குள்ளாக் கியிருப்பதாகவும் தான் 380 ஓட்டங்களைப் பெறும் போது இச்சாதனையை யாரும் முறியடிக்கப்போவதில்லை என்றே நினைத்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.




# ஆட்டமிழக்காது 400 ஓட்டங்களைப் பெற்று பிறையன் லாறா புதிய உலக சாதனை



மேற்கிந்திய அணியின் தலைவர் பிறையன் லாறா டெஸ்ட் கிரிக்கெட் போட்டியொன்றில் அதிக ஓட்டங்களைப் பெற்றவர் என்ற சாதனையை மீண்டும் நிலைநாட்டியுள்ளார்

அன்டிக்குவாவில் நடந்த இங்கிலாந்திற்கு எதிரான நான்காவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியில் அவர் 400 ஓட்டங்களைப் பெற்று இச்சாதனையை நிலை நாட்டியுள்ளார். அத்தோடு உலகில் ஒரு இனிங்ஸில் 400 ஓட்டங்களைப் பெற்ற ஒரே ஒரு வீரர் என்ற சாதனையையும் ஏற்படுத்தியுள்ளார்.

பிறையன் லாறா ஏற்கனவே தமது சக நாட்டவரான சோபஸ் அவர்களின் உலக சாதனையாக இருந்த 365 ஓட்டங்கள் என்பதைக் கடந்து சாதனைபடைத்திருந்தார். பத்துவருடங்களுக்கு முன் இதே ஆடுகளத்தில் லாறாவினால் இச்சாதனைபடைக்கப்பட்டிருந்தது.

இச்சாதனையான 375 ஓட்டங்களைக்கடந்த ஆறுமாதங் களுக்கு முன்னர் அவுஸ்திரேலிய ஆரம்ப துடுப்பாட்டக் காரரான மத்தியூ ஹெய்டனால் முறியடிக்கப்பட்டது. மைத்தியூ ஹெய்டன் 380 ஓட்டங்களைப் பெற்று இச்சாத னையை முறியடித்திருந்தார்.

இந்நிலையில் பிறையன் லாறா நேற்று முன்தினம் மத்தியூ ஹெய்டனின் சாதனையை முறியடித்ததோடு, ஆட்டம் இழக்காது 400 ஓட்டங்கள் என்ற மைல் கல்லையும் தொட்டார்.

# கருணா தனக்கு விசுவாசமானோருடன் இராணுவ முகாமிற்குள் இருக்கலாம்!

## மூத்த உறுப்பினர் கரிகாலன் தெரிவிப்பு

கருணா தமக்கு விசுவாசமான ஆதரவாளர்களுடன் இராணுவ முகாம்களுக்குள் பாதுகாப்பாக இருக்கலாம்என எதிர்பார்க்கப்படுவதாக விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் கரிகாலன் பி.பி.ஸி.க்கு கருத்துத் தெரிவிக்கையில் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

கேள்வி: மட்டக்களப்பு பகுதியில் ஏற்பட்ட மோதல் முடிவிற்கு வந்துள்ள நிலையில் கருணா எங்கிருக்கின்றாரென உங்களுக்குத் தெரியுமா?

மட்டக்களப்பை விட்டு கருணா தனக்கு விசுவாசமானவர்களுடன் வெளியேறிவிட்டாரென தகவல்கள் கிடைத்துள்ளது. அவருடன் விசுவாசமாகயிருந்த 15 பேர் சென்றிருக்கலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனைய போராளிகள் அனைவரும் வெளியேறியுள்ளனர். அவர்களில் சிலர் தமது உறவினர்களிடம் தற்போது சென்றுள்ளனர். அதிகமான போராளிகள் புலிகள் அமைப்பில் இணைந்து மீண்டும் செயற்படுவதற்காக முகாம்களைத் தேடி வந்து கொண்டிருக்கின்றார்கள்.

இதேவேளை, கருணாவும், அவருடன் சென்ற ஆதரவாளர்களும் இராணுவ முகாம்களுக்குள் பாதுகாப்பாக இருக்கலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

கேள்வி:- கருணாவின் இக்கிளர்ச்சிக்கு உண்மையான காரணம் என்னவென நீங்கள் கருதுகின்றீர்கள்?

இது அவருடைய சொந்த பலவீனத்தினால், ஏற்பட்ட பயன் என்பது ஒன்று. மற்றது இவர் ஓர் அந்நிய சக்திக்கு அடிமையாகி தன்னுடைய சுயநோக்கத்திற்காக இதனைச் செய்திருக்கலாம். அவரை ஏதோ ஒரு வெளிச்சக்தி விலைக்கு வாங்கிவிட்டதோ? அல்லது இவர் செய்த குற்றங்களுக்கு தன்னால் நியாயப்படுத்த முடியாது தனக்கு தண்டனை ஏற்பட்டுவிடுமோ? என்ற பயத்தின் காரணமாக இவர் இப்படியான ஒரு முடிவுக்கு வரக் காரணமாகயிருந்ததென அவருடைய செயற்பாடுகளிலிருந்து எங்களால் புரிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது. ஆனால், இவ் வெளிச்சக்தி யார் என்பது இன்னும் புலப்படாத நிலையில் இருக்கின்றது. விரைவில் அது வெளிவரும் என எதிர்பார்க்கின்றோம். இதேவேளை, தற்போது சிறிலங்கா இராணுவத்தினுடைய தொடர்பு இவருக்கு இருக்கின்ற காரணத்தினால் அது வெளிப்படையாகத் தெரிந்தது. சிறிலங்கா இராணுவம் இவரை பயன்படுத்துவதற்கோ அல்லது எமது போராட்டத்தை நலிவடையச் செய்வதற்கு இவரைப் பயன்படுத்தியதோ என நாங்கள் இப்போது உறுதியாக நம்பக்கூடியதாகவுள்ளது. ஆனால், அதற்கு அப்பால் இவர் இவ்வாறு செயற்படுவதற்கு வேறு ஏதும் சக்திகள் இருந்ததா என்பதை எதிர்காலத்தில்தான் நாங்கள் நிரூபிக்கக்கூடியதாக இருக்கும் என்றார்.

# தேசியநல்லிணக்க அரசு குறித்து மீண்டும் பேச்சுவார்த்தைகள்

### – கொழும்பு அரசியல் வட்டாரங்கள் முயற்சி

(கொழும்பு)

தேசிய நல்லிணக்க அரசை அமைக்கும் பேச்சுவார்த்தைகள் மீண்டும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் சூடுபிடித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி அமைப்பதில ஜே.வி.பி.யினர் போடும் முட்டுக்கட்டைகள் மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகள் மட்டக்களப்பு மாவட்டத்தை விரை வில் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது போன்ற விடங்கள் மீண்டும் தேசிய நல்லிணக்க அரசை அமைக் கும் திட்டத்தை தீவிரப்படுத்தியுள்ளது.

இது குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்த்தரும் முன்னாள் அமைச்சருமான மிலிந்த மொறகொடவிற்கு மிகவும் வேண்டியவர் களூடாக இது குறித்த பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றுள்ளன. முன்னாள் பிரதமரும் ஐ.தே. கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க இந்த தேசிய நல்லிணக்க அரசு அமைக்கும் திட்டத்திற்குப்பச்சைக் கொடிகாட்டியுள்ளதாகவும் கொழும்பு அரசியல் வட்டாரங்களிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.ம.சு. முன்னணி ஜே.வி.பி.யுடன் சேர்ந்து அரசாங்கம் அமைத்தாலும் கூட தேசிய நல்லிணக்க அரசை அமைக்கும் திட்டம்தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்றும் அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது. (32)

# கோப்பாயில் இரு சிறுவர்கள் ராணுவ ரக் மோதி படுகாயம்

ராணுவ ரக் வண்டி மோதியதில் இரு சிறுவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று மாலை யாழ். கோப்பாய்பகுதியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அதே இடத்தைச்சேர்ந்த பகீரதன் (வயது 12), சுதர்சன் (வயது 13) ஆகிய இருவருரே காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி பகுதியிலுள்ள வீதி ஒன்றால் துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த பிரஸ்தாப இரு சிறுவர்களையும் எதிரே வந்த இராணுவ ரக் வண்டி ஒன்று மோதி விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாக தெரியவருகிறது.(33)

# போராளிகள், பொதுமக்கள் மீது ஈ.பி.டி.பி.தாக்கு பொதுமக்கள் ஈ.பி.டி.பி.யினர் மீது வாள்வெட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். ஊர்காவற்துறைப்பகுதியில் போராளிகள் மீதும் பொதுமக்கள் மீதும் தாக்குதல் நடத்திய ஈ.பி.டி.பி.யினர் மீது பொதுமக்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

யாழ். ஊர்காவற்துறைப் பகுதியில் பொதுமக்கள் மீதும் போராளிகள் மீதும் ஈ.பி.டி.பி. தேசவிரோதிகளும் சிறிலங்காப் பொலிசாரும் இணைந்து கண்மூடித்தனமான தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

ஊர்காவற்துறையில் உள்ள தம்பாட்டி எனும் பிரதேசத்திலிடம் பெற்ற இத் தாக்குதல் சம்பவத்தில் 3 போரா ளிகளும் 4 பொதுமக்களும் தாக்கு தல்களுக்கு இலக்காகியுள்ளனர். சம்பவத்தைக் கண்டு ஆத்திரமடைந்த மக்கள் நடத்திய பதில் தாக்குதலில் ஒரு ஈ.பி.டி.பி. உறுப்பினர் வாள் வெட்டிற்கு இலக்காகியிருப்பதுடன் மேலும் 4 பேர் காயமடைந்துள்ளனர். இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது.

மேற்படி பிரதேசத்தில் வழமை போல அரசியல் பணிகளில் தீவக அரசியல்துறைப் போராளிகள் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை பொலிசாரின் துணையுடன் அங்கு வந்திறங்கிய ஈ.பி.டி.பி. யினர் போராளிகளை வீண் வம்புக்கு இழுத்து அவர்கள் மீது கூரிய ஆயுதங்களால் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதற்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து ஈ.பி.டி.பியினரை அங்கிருந்துசெல்லுமாறு கூறி கோஷம் எழுப்பினர். இதனால் ஆத்திரமடைந்த ஈ.பி.டி.பி.யினரும் பொலிசாரும் மக்கள் மீதும் போராளிகள் மீதும் தம்வசமிருந்த கூரிய ஆயுதங்களால் மிக மூர்க்கத்தனமாக தாக்கியுள்ளனர்.

இது கண்டு ஆத்திரமடைந்த அப்பகுதி பொது மக்கள் ஈ.பி.டி.பி.யினர் மீது பதில் தாக்குதல்களை நடத்தியதில் அவர்கள் தரப்பில் ஒருவர் வாள்வெட்டிற்கு இலக்காகியிருப்பதுடன் மேலும் 4 பேர் காயமடைந்தனர்.

ஈ.பி.டி.பி. யினரும் பொலிசாரும் இணைந்து மேற் கொண்ட இந் நடவடிக்கைகள் மக்கள் மீது வன்முறைகளை மேற் கொள்ளும் செயற்பாடு எனக் கண்டித்துள்ள யாழ்.மாவட்ட அரசியல் துறையினர் இது தொடர்பில் போர் நிறுத்தல் கண்காணிப்புக் குழுவிலும் முறைப்பாடு செய்துள்ளனர். (33)

# வீரர்கள் எவரும் கலந்து கொள்ளாமையால் இராணுவத்தின் விளையாட்டு நிகழ்வு ரத்து

புத்தாண்டு தினத்தை யொட்டி ராணுவத்தால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்த விளையாட்டு நிகழ்வுகள் பிசுபிசுத்துப் போய்விட்டது.

நேற்று முன்தினம் இடம் பெறவிருந்த துவிச்சக்கரவண்டியோட்டம் உள்ளிட்ட விளையாட்டுப் போட்டிகளில், விளையாட்டு வீரர்கள் கலந்து கொள்ளாமையால் போட்டிகள் கைவிடப்பட்டு விட்டது.

முன்னதாக படைத்தரப்பால் நடாத்தப்படும் இவ் விளையாட்டுப் போட்டிகளில் பொதுமக்களோ, விளையாட்டுக் கழகங்களோ கலந்து கொள்ளவேண்டாமென கோரும் அனாமதேய சுவரொட்டிகள் வடமராட்சிப் பகுதியில் பரவலாக ஒட்டப்பட்டிருந்தன.

இந்நிலையிலேயே இவ் விளையாட்டுப் போட்டிகளில், விளையாட்டு வீரர்கள் எவரும் கலந்து கொண்டிருக்கவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விளையாட்டுப் போட்டிகளிற்கு வடமராட்சிப் பகுதியில் நிலை கொண்டுள்ள இலங்கை இராணுவத்தின் 52-4வது படைப்பிரிவே அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (27)

### வடபகுதி...

கேட்டுக்கொள்வதுடன் இங்கு அவர்களை வருமாறு அழைக்கிறோம் எனவும் அவர் தெரிவித்தார்.

### தமிழ்க்...

இச்சந்திப்பு இடம் பெறுமென குறிப்பிட்ட போதிலும் [illegible] திகதி குறித்து எந்தத்தகவலும் வெளியாகவில்லை. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பில் நாளை மீண்டும் கூடவுள்ளனர். இச்சந்திப்பின் பின்னர் கிளிநொச்சியில் அரசியல்துறைப் பொறுப்பாளருடனான சந்திப்பு இடம் பெறுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (32),(27)

### கண்காணிப்புக்...

வினருடன் தொடர்பை நாம் கொண்டிருக்கவில்லை விடுதலைப்புலிகள்அமைதியான முறையில் கருணா குழுவினரின் கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளை மீண்டும் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர். என அவர் மேலும் தெரிவித்துள்ளார்

### 18அகவைக்குக்...

செல்வதற்கான ஒழுங்குகளை யூனிசெவ்மேற்கொண்டது.

இந்நிகழ்வில் மட்டு-அம்பாறைத் தளபதி ராம், மட்டு-அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் தியாகராஜா மற்றும் சமாதான செயலகத்தின் பிரதி இயக்குநர் பவானந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். இதற்கு முன்னரும் பல நூற்றுக்கணக்கான போராளிகள் அவர்களது வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# சனாதிபதியின் அரசியல் சீர்திருத்தம் சிறுபான்மைக் கட்சிகளுக்கு பாதிப்பு

### - மு.கா.தலைவர் ரவூப்ஹக்கீம்

சனாதிபதி மேற் கொள்ளவிருப்பதாகக் கூறப்படுகின்ற அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் சிறுபான்மைக் கட்சிகளைப் பொறுத்தவரை பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது. எனவே இவ்வாறான முனைப்பைத் தமது கட்சி ஆட்சேபிப்பதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நேற்றுகண்டியில் ஜாதிகஹெல உறுமய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் உடவத்த நந்ததேராவை ரவூப்ஹக்கீம், கட்சியின் செயலாளர் ஹசன்அலி உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள் 06 பேர் சந்தித்தனர். இதன் போதே இதனைத்தெரிவித்தார்.

இச்சந்திப்பின் போது ஹக்கீம் கருத்துத் தெரிவிக்கையில்:- நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையை முழுமையாக நீக்காது அதிலிருக்கும் சில அம்சங்களை மட்டும் நீக்கிவிட்டு சனாதிபதி முறையைத்தொடர்ந்தும் கொண்டுசெல்ல வேண்டும் என்பதே எமது கட்சியின் விருப்பமாகுமெனத் தெரிவித்தார்.

இதேவேளை சனாதிபதி நாடாளுமன்றத்திற்கு பதில் சொல்லவேண்டிய அதேநேரம் நீதிமன்றத்திற்கும் அவர் ஆஜராகக் கூடிய நிலையில் அரசியலமைப்பு திருத்தியமைக்கப்பட்டு சனாதிபதி பதவிதொடர்ந்தும் முன்னெடுத்துச்செல்லப்படுவதே சிறந்த வழியாகும். தேர்தல் முறையைப் பொறுத்த வரையில் தற்போதைய விகிதாசார முறைமாற்றப் படுமாயின் நடாளுமன்றத்தில் ஜாதிகஹெல உறுமய மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளில் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் குறையலாம் என எதிர்பார்ப்பதாக ஹக்கீம் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்த நாடு சிங்கள பௌத்தருக்குரியது. தற்போது அவர்களுக்கு பதவிக்கு வந்த அரசாங்கங்கள் உரியபாதுகாப்பை வழங்கவில்லை எனவே அதனைப் பெற்றுக்கொடுப்பதற்காகவே நாம் நாடாளுமன்றம் செல்ல நிர்ப்பந்திக்கப் பட்டதாக உடவத்த நந்ததேரர் தெரிவித்தார். (32)

### பெற்றோரினதும்...

இயக்கத்தில் இணைத்துக்கொள்ளும் நோக்கம் இல்லை. ஆனால் எமது விடுதலைப் போராட்டத்திற்காக பணியாற்ற விரும்புகின்றவர்கள் எவரும் விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொள்வதை -அவர்களை எமது தலைமையின்கீழ் அணிதிரட்டுவது விடுதலைக்காக போராடுகின்ற விடுதலை அமைப்பின் கொள்கையாகவுள்ளதென அவர் மேலும் தெரிவித்தார்.

### துரோகி...

பட்டதுடன் அவர் விலங்கிடப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

12.04.2004 காலை துரோகி கருணா தப்பி ஓடுவதற்கு முன்பாக தடுத்து வைக்கப்பட்டிருந்த நீலன் அவர்களை தான் தங்கியிருந்த மருதம் முகாமிற்குக் கொண்டு வரும்படி கூறியுள்ளார்.

அதன் பின்னர் 13.04.2004 அன்று மருதம் முகாமில் தேடுதலை மேற்கொண்டபோது நீலன் அவர்களின் வித்துடல் கண்கள் துணியினால் கட்டப்பட்ட நிலையிலும், கைகள் விலங்கிடப்பட்ட நிலையிலும் கண்டுடுக்கப்பட்டது.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டத்தில் துரோகத்தனமாகக் கொல்லப்பட்டு வீரச்சாவடைந்த போராளிகளின் விபரம் வருமாறு.

12.04.2004 அன்று

*லெப்.கேணல் நீலன்/சின்னத்தம்பி (சீனித்தம்பி சோமநாதன் ஆரையம்பதிமூன்று மட்டு, த.மு: செந்தமிழன் குடியிருப்பு ,கைவேலி புதுக்குடியிருப்பு, (முல்லைத்தீவு.)

07.04.2004 அன்று

* மேஜர் தமிழீழன் (சதாசிவம் திருக்கேதீஸ்வரன் மகிழவெட்டுவான் ,ஆயித்தியமலை செங்கலடி மட்டு)

10.04.2004 அன்று

* கப்டன் மாவேந்தன் (திருநாவுக்கரசு புவனேஸ் வரசன், இறாலோடை காயங்கேணி, மாங்கேணி-மட்டு)

* கப்டன் நம்பி (தர்மலிங்கம் பத்மநாதன் மாதவன்-வீதி கல்முனைமூன்று அம்பாறை)

*லெப்ஸ்ரனகீதன்/சுபா (களுவன்கேணி)

இவர்களுடன் ஆதரவாளர் ஒருவரும் 10.04.2004 அன்று துரோகி கருணாவால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். *மோகன் (களுவன்கேணி) என்பவரே இவ்வாறு சுட்டுக்கொல்லப் பட்டவராவார்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

### பொதுமக்கள்...

நேரத்தின் பின்னர் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டதாகவும் தெரிவித்தார். நேற்று கடற்கரைக்கு தான் சென்ற போது மண்ணில் புதையுண்ட நிலையில் கால்கள் வெளியே தெரிந்ததாகவும் அதை மீட்டபோது தனது கணவர் எனதான் இனங்கண்டதாகவும் குறிப்பிட்டார். இதனைத் தொடர்ந்து அங்கே மேலும் இரு சடலங்களை கண்டெடுத்ததாகக் குறிப்பிட்டார்.

இதேபோல் மண்டிட்டிச் சந்திக்கு அண்மையில் கருணா குழுவின் முக்கியஸ்தரான ராபர்ட்டின் சகோதரரான இன்பன் என்பவரால் சில சடலங்கள் கொண்டுவந்து புதைக்கப் பட்டதாக கொக்கட்டிச் சோலை வாசிகள் தெரிவித்தனர். இரவில் சிவப்பு நிற பிக்கப் வாகனத்தில் இச் சடலங்கள் கொண்டு வந்து புதைக்கப்பட்டதால் தாங்கள் பயத்தில் இப்பகுதிக்கு செல்லவில்லை என அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்..

கடந்த 4ம் திகதி ஜெயந்திபுரத்தில் இருந்து கொண்டு செல்லப்பட்ட இருவரின் சடலங்கள் சத்துருக்கொண்டானில் புதைக்கப் பெற்றதாக அப்பகுதி வாசிகள் தெரிவிக்கின்றனர். இச்சம்பவத்தில் சுப்பிரமணியம் சிவகுமார் காயமடைந்ததுடன் அவரும் அவருடன் சென்ற நாவேந்திரன் குபேந்திரா என்பவரும் கடத்திச் செல்லப்பட்டனர்.

மேலும், மீனகம் முகாமில் தடுத்து வைக்கப் பெற்று தற்போது விடுவிக்கப்பெற்ற ஒருவர் தகவல் தெரிவிக்கையில் தம்முடன் இருந்த இருவர் அடித்துக் கொல்லப்பட்டதாக குறிப்பிட்டார்.

தாழங்குடாவில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கொல்லப்பட்ட ஒருவரின் சடலம் சொந்த இடமான கடுக்காமுனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது இந்த மரணச் சடங்குகளில் எவரும் கலந்து கொள்ளக்கூடாது என கருணா குழுவினர் எச்சரித்திருந்தனர். இது தொடர்பாக தனது ஆட்சேபத்தைத் தெரிவித்த பெண்மணி யொருவரின் வாயை கருணா குழுவினர் கிழித்தாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும், கருணா குழுவிலிருந்து தப்பியோடி வருகையில் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகி தலையில் படுகாயமடைந்த நிலையில் கடந்த நான்கு நாட்களாக ஒரு போராளி மட்டு வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். இவருக்கு பொலிஸ பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

ஏற்கனவே பனிச்சங்கேணியில் ஒருவரும், காயங்கேணியில் ஒருவரும் கருணாகுழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர். இவர்கள் இன்னமும் இனங்காணப்படவில்லை. இதேவேளை அம்பாறை திருக்கோயிலைச் சேர்ந்த சோதிலிங்கம் என்பவர் கருணா குழுவினால் கடத்திச் செல்லப் பட்டுக் கொல்லப்பட்டமை தெரிந்ததே.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது